பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி 23, புதன்கிழமை 05.04.2017 கதிர் 151

## வெற்றி வாய்ப்பை இழந்தார் ராகவன்

மார்க்கம், ஏப். 05

கனடாவில் மார்க்கம் தோன் ஹில் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் இலங்கைத் தமிழ் வம்சாவளி வேட்பாளரான ராகவன் பரஞ்சோதி வெற்றி வாய்ப்பை இழந்தார்.

அத்தொகுதியில் லிபரல்

பக்கம் 18 »



# அரசில் தமிழரின் உரிமைகளை ஏற்போருடன் கூட்டுச் சேர்வோம்!

## முதல்வர் விக்கியின் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 05

**காலத்திற்கு ஏற்றவாறு எமது சிந்தனைகளில் மாற்றங்கள் ஏற்படுவது அவசியம். அதனால், அரசாங்கத்தில் தமிழ் மக்களின் உரிமைகளை மனமுவந்து ஏற்றுக் கொள்வோருடன் கூட்டுச் சேரவேண்டும் என்று நினைக்கின்றேன். அதன் ஊடாக உங்கள் பொருளாதார வலிமையை மேம்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். இதைச் செய்வதாயின் நாங்கள் தனிப்பட்ட விதத்தில் அரசிடமிருந்து நன்மைகளை எமக்கென்று பெறக்கூடாது. அவ்வாறான பொறியில் நாம் அகப்பட்டுக் கொண்டால் எமது கோரிக்கைகளுக்கு மதிப்பில்லாமல் போய்விடும்.**

**-இவ்வாறு கூறியிருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர், நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரன்.**

வடமாகாணதொழிற்றுறைத் திணைக்களத்தினால் நிறுவப்பட்டஉள்ளூர்உற்பத்திப்பொருட்கள் விற்பனை நிலையத்திறப்பு விழா நேற்று மாலை யாழ்ப்பாணம்ஊர்காவற்றுறைவீதி, மண்கும்பானில் நடைபெற்ற போது அதில் முதலமைச்சர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார். அந்த உரையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

பக்கம் 18 »

## சர்வதேச ஈடுபாட்டை வலியுறுத்துகிறார் சம்பந்தன்

### ஜேர்மன் தலைவருடனான சந்திப்பில்



கொழும்பு, ஏப். 05

இலங்கையில் சிறுபான்மை மக்களின் அபிலாஷைகள் வென்றெடுக்கப்படுவதற்குச் சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான பங்களிப்பு அவசியம்.

- இதனை நேற்றுத் தம்மைச் சந்தித்த ஜேர்மன் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பேராசிரியர் கலாநிதி நோபேர்ட் லம்மேர்ட்டிடம் தெரிவித்தார் எதிர்க்

பக்கம் 18 »

## கேப்பாபிலவுக் காணிகளை விடுவிப்பதற்கு தளபதியும் சம்பந்தனிடம் உறுதியளிப்பு

முல்லைத்தீவு, ஏப்.05

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவில்இராணுவத்தினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகள்நிச்சயமாகவிடுவிக்கப்படும் என்று இராணுவத் தளபதி கிரிஷாந்த டி சில்வா, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் உறுதியளித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் இதுபற்றிய தகவலை வெளியிட்டுள்ளார்.

கேப்பாபிலவில் உள்ள 468 ஏக்கர்காணிகளை இராணுவத்தி

பக்கம் 18 »

## பட்டதாரிகள் இன்று பேரணி

(எஸ்.நிதர்ஷன்)

வடக்குமாகாணவேலையற்ற பட்டதாரிகள் தமக்கு நியமனம் வழங்கக் கோரி இன்று பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றவேலையற்றபட்டதாரிகளில் பெரும் எண்ணிக்கையானோர் படித்துப் பட்டம் பெற்ற யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக இந்தப் பேரணி ஆரம்பமாகி யாழ்.மாவட்டச்செயலகத்தைச்சென்றடையவுள்ளது.

பக்கம் 18 »

## சிவில் பாதுகாப்புக் கூட்டத்தில் அரசியல்வாதிகள் பலரும் 'மிஸ்ஸிங்'

(எஸ்.நிதர்ஷன்)

மக்களுக்கு அடிப்படையில் உள்ள சட்ட ஒழுங்குகள் மற்றும் பாதுகாப்புப்பிரச்சினைகள்தொடர்பில் கலந்துரையாடி முடிவுகளை எடுக்கும்யாழ்.மாவட்டசிவில் பாதுகாப்புக்குழுக்கூட்டம்நேற்றுயாழ். மாவட்டச் செயலகத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்றது.

இதில் பொலிஸ் தரப்பில் யாழ். மாவட்ட பிதிப் பொலிஸ்மா அதிபர் உட்பட அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பொறுப்

பக்கம் 18 »

## கேப்பாபிலவுப் போராட்டத்தில் ஈடுபட்ட தாய் மயங்கி வீழ்ந்தார்

முல்லைத்தீவு, ஏப்.05

காணி மீட்புக்காக கேப்பாபிலவுமக்கள்முன்னெடுத்துள்ள போராட்டம் நேற்று 34 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி இராணுவ முகாமுக்கு முன்னால் தகரக்கொட்டகை அமைத்து இம்மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தநிலையில்காணிகளை

பக்கம் 18 »

## வலி.வடக்கில் பொலிஸ் காணியையும் படைத்தரப்பினர் ஆக்கிரமித்துள்ளனர்

### அதைக் கொடுத்தாலே மக்களின் காணிகளை விடுவிக்குமாம் பொலிஸ்

(எஸ்.நிதர்ஷன்)

வலி.வடக்கில் பொலிஸாருக்குச்சொந்தமானகாணியை படையினர்ஆக்கிரமித்துவைத்திருக்கின்றனர். அந்தக் காணி விடுவிக்கப்படும் வரை பொலிஸார் வசம் உள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று உறுதிபடத் தெரிவித்தார் யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ்மாஅதிபர்சஞ்சீவதர்மரட்ண.

யாழ்.மாவட்டசிவில்பாதுகாப்புக்குழுக்கூட்டம்நேற்றுக்காலை மாவட்டச்செயலகமாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பக்கம் 18 »

## காணி மீட்புக்காக நல்லூர்ப் பிரகடனம்



யாழ்ப்பாணம், ஏப்.05

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட இலங்கையில் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் காணிகளை விடுவிக்கக்கோரி 12 தீர்மானங்களைக் கொண்ட 'நல்லூர்ப் பிரகடனம்' நேற்றுச் செய்

பக்கம் 18 »

## யாழ்.பல்கலைத் துணைவேந்தராக பேராசிரியர் சிறிசற்குணராஜா

யாழ்ப்பாணம், ஏப். 05

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராகப் பேராசிரியர் சிறிசற்குணராஜா, ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளார் என அறியவருகின்றது.

இந்த நியமனம் தொடர்பான அறிவுறுத்தல்பல்கலைக்கழகமானியங்கள்.

பக்கம் 18 »





சட்டம், ஒழுங்கிலை. சட்டாம்பித் தனம்காட்ட ஏலாதுஎண்டு நினைச்சிருப்பினம்... அதுதான்....!

## திருத்தம்

''அமைச்சரவையை மாற்ற ஜனாதிபதிக்கு அதிகாரம் கிடையாது- சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு''- என நேற்றைய 'காலைக் கதிர்' இதழில் முதலாம் பக்கத்தில் வந்த தலைப்புச் செய்தியில் பிவித்று ஹெல உறுமயவின் தலைவர் சம்பிக்க ரணவக்க என்று குறிப்பிட்டமை தவறாகும். அதனை பிவித்று ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில எனத் திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.- ஆசிரியர்.

## தமிழக மீனவர்கள் 8 பேர் விடுவிப்பு!

மன்னார், ஏப்.05

ராமேஸ்வரம் மீன்பிடித் துறை முகத்தில் இருந்து கடந்த மார்ச் 23 ஆம் திகதி மன்னார் அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கைக் கடற் படையினரால் கைது செய்யப்பட்ட 8 மீனவர்கள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

இதற்கிடையே, மூன்றாவது கட்ட மீனவர் பேச்சு கொழும்பில் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், இலங்கை சிறைகளில் உள்ள 38 தமிழக மீனவர்களை விடுதலை செய்ய இலங்கை அரசு பரிந்துரை செய்தது. அதைத் தொடர்ந்து, முதல்கட்டமாகக் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சிறையில் இருந்து 30 தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

வவுனியா சிறையில் இருந்த 8 தமிழக மீனவர்களும் மன்னார் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலையான மீனவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இரு பெண்கள் உட்பட 6 பேருக்கு வாள் வெட்டு!

வவுனியா,ஏப்.05

வவுனியா, ஆச்சிபுரம் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற கைகலப்பில் இரு பெண்கள் உட்பட 6 பேர் வாள் வெட்டுக்கு இலக்காகிக் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, ஆச்சிபுரம் பகுதியில் இரவு இரு பகுதியினருக்கு இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து சமாதானப்படுத்தும் நோக்கில் ஒரு பகுதியினர் மற்றைய பகுதியினரின் வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

அங்கு வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியுள்ளது. அதன் போதே ஒரு பகுதியினர் வாள் கொண்டு மற்றைய பகுதியினர் மீது தாக்கியுள்ளனர். வெட்டுக் காயத்துக்கு ஆளானவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதன்போது; வைத்தியசாலையிலும் கைகலப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில் தாக்குதல் நடத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-100)

# அரசுக்கு நெருக்கடிகள் கொடுக்கும் விதத்தில் போராட்டங்களை முன்னெடுப்போம்

காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள் எச்சரிக்கை



கிளிநொச்சி, ஏப்.05

காணாமற்போனவர்கள் தொடர்பில் அரசு உரிய பதிலைத் தராவிட்டால் போராட்ட வடிவங்களை மாற்றி அரசுக்கு நெருக்கடிகளை கொடுக்கும் விதத்தில் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

-இவ்வாறு காணாமல் போனவர்களின் உறவினர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைமீட்டுத்தரக்கோரி 44 ஆவது நாளாக நேற்றும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்த நிலையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இறப்புச் சான்றிதழ்களையும், நஷ்ட ஈடுகளையும் வழங்குவதற்கு அக்கறை செலுத்தும் அரசு காணாமற் போனவர்களை மீட்பதற்கு அக்கறை செலுத்தவில்லை.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பான உரிய பதிலை அரசு வழங்கவேண்டும், இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்க வேண்டும் எனக் கோரி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஒன்றரை மாதமாக போராட்டத்தை முன்னெடுத்தும் இந்த அரசு எங்களுக்கு உரிய பதில் எதனையும் வழங்கவில்லை.

எங்களது உறவுகளுக்கான பதில் விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இரவு, பகலாக நாங்கள் இந்த போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். கடந்த 44 நாள்களும் எமக்கு ஏமாற்றமான நாள்களாகவே இருக்கின்றன.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பில் ஒரு வீத நம்பிக்கை கூட எங்களுக்கு இல்லை.

காணாமல் ஆக்கப்பட்ட எங்களது உறவுகளுக்கான இறப்புச் சான்றிதழ்களை வழங்கவும், அல்லது நஷ்ட ஈடுகளை வழங்கவும் அரசு காட்டும் அக்கறை, காணாமற்போனவர்களை கண்டறிவதற்கும் அல்லது மீட்பதற்கும் காட்டவில்லை.

இராணுவம் கைது செய்த உறவுகள், சாட்சிகளோடு ஒப்படைக்கப்பட்ட உறவுகள் எனப் பலரையும் வெளிக்காட்டாது கடந்த எட்டு ஆண்டுகளாக அரசு வைத்திருக்கின்றது.

சரியான முடிவு கிடைக்காது போனால் போராட்டங்கள் விரிவுபடுத்தப்படும்.-என்று தெரிவித்தனர். (ஐ-70)

## இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வருகிறார் மே 11 இல்!



கொழும்பு, ஏப்.05

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, மே மாதம் 11 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று புத்த சாசன மற்றும் நீதியமைச்சர் கலாநிதி விஜயதாசராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் இரண்டு நாள்கள் இலங்கையில் தங்கியிருப்பார் என்றும் கூறினார்.

இந்தியப் பிரதமருடன் அந்த நாட்டு இணை அமைச்சர்கள் பலரும் வருகை தரவுள்ளனர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விஜயத்தை இந்திய அரசு உறுதிப்படுத்தியுள்ளது என்றும் சர்வதேச வெசாக் வைபவத்தின் ஆரம்ப நிகழ்வில் பிரதமர் மோடி, பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார் என்றும் கூறினார்.

சர்வதேச வெசாக் வைபவத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக 11 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. வெசாக் வைபவத்துக்கு அமைவாக மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களிலும் வெசாக் வைபவங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்றும் கூறினார். (ஐ)

## பாடசாலைகளுக்கு முதலாம் தவணை இன்று விடுமுறை

அரசாங்க மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளுக்கான 2017 ஆம் ஆண்டின் முதலாம் தவணை கல்வி நடவடிக்கை இன்றுடன் நிறைவடைகிறது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை, முஸ்லிம் பாடசாலைகளுக்கான முதலாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் நாளை வியாழக்கிழமை நிறைவடைவதுடன் இரண்டாம் தவணைக்கான கல்வி நடவடிக்கை எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (ஐ)





## வீதியை திருத்துமாறு ஆர்ப்பாட்டம்!

வவுனியா,ஏப்.05


வவுனியா, தாலிக்குளம் ஊடாக செட்டிகுளம் செல்லும் வாரிக்குட்டியூர் பிரதான வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது என்று தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஒன்று திரண்டு வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 7 மணிக்கு வாரிக்குட்டியூர் சந்தியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர் கூடி 'வீதியை திருத்தம் செய்து தா', 'மாணவர்களின் போக்குவரத்துக்கு பாதுகாப்பான வீதி வேண்டும்', 'எங்கள் ஊரில் கிரவல் எடுத்து ஏ - 9 வீதியை திருத்துவதா' போன்ற கோஷங்களை எழுப்பியமையுடன் வாசகங்கள் தாங்கிய பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

அரை மணி நேரம் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (ஐ-100)

## இந்தியாவிலிருந்து திரும்பிய பெண் நஞ்சுப் போத்தலுடன் போராட்டம்

### அவருடைய வீட்டை மீட்பதற்காக



யுத்தம் காரணமாக இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென்ற பெண்ணொருவரின் வவுனியாவில் உள்ள காணியை வேறொருவர் ஆக்கிரமித்துள்ளார் எனவும் அந்தக் காணியை விடுவிக்காவிட்டால் நஞ்சு அருந்தி உயிரை மாய்ப்பார் எனவும் கூறி அந்தப் பெண் நேற்று நஞ்சுப் போத்தலுடன் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இந்தியாவில் இருந்து வவுனியாவுக்கு திரும்பிய காணி உரிமையாளர் எனக் கூறப்பட்ட பெண்ணே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

வவுனியா – தோணிக்கல், சேக்கிழார் வீதியில் உள்ள வீடொன்றுக்கு முன்பாக நேற்றிரவு 7.00 மணி தொடக்கம் 8.00 மணி வரை இந்தப் போராட்டம் இடம்பெற்றது. தன்னுடைய வீட்டையும் காணியையும் வேறொருவர் ஆக்கிரமித்துள்ளார் எனவும் அதை விடுவிக்காவிட்டால் நஞ்சு அருந்தித் தாமே தற்கொலை செய்வார் எனக் கூறியுமே அவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இந்த விடயத்தில் தலையிட்ட பொலிஸார் நஞ்சுப் போத்தலை அவரிடம் இருந்து பெற்றுக் கொண்டனர். இது தொடர்பாக வவுனியா அரச அதிகாரிகளுடன் பேசி உரிய தீர்வு பெற்றுத் தரப்படும் எனக் கூறப்பட்டதை அடுத்து அவர் போராட்டத்தைக் கைவிட்டார். (ம- 100)

## புலம்பெயர் நாடுகளில் இருந்து வருவோரிடம் கப்பம் கோரும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன

### நாகர்கோயிலில் அதிக சம்பவங்கள், பொலிஸார் தகவல்

(எஸ்.நிதர்ஷன்)

புலம்பெயர் நாடுகளில் இருந்து வருபவர்களை அச்சுறுத்தி கப்பம் பெறும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளன என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சிவ தர்மரட்ண தகவல் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கப்பம் பெறும் சம்பவம் இடம்பெறுவதை எவராவது அறிந்தால் அது தொடர்பாக பொலிஸாருக்கு இரகசியமான முறையில் தகவல்கள் வழங்குங்கள் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக்குழுக் கூட்டம் நேற்று காலை யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

**பெண் மீது பொலிஸார் தாக்குதல்**

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் உள்ள வீடொன்றிற்குச் சென்ற பொலிஸார் கர்ப்பிணிப் பெண் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெற்றனவா? பெண் மீது தாக்குதல் நடத்தியவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா? – எனக் கேள்வி எழுப்பியிருந்தார்.

இது தொடர்பில் விளக்கம் கொடுத்த பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி –

சம்பவ இடத்தில், வெளிநாட்டில் இருந்து வந்த நபரை அச்சுறுத்திக் கப்பம் கோரப்பட்டது எனப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. முறைப்பாட்டாளர் தன்னிடம் கப்பம் கோரியவரை அடையாளம் காட்டுவார் எனவும் கூறியிருந்தார்.

இதன்படி அவரையும் அழைத்துக்கொண்டு கப்பம் கோரியவரைக் கைது செய்வதற்காகச் சென்றிருந்தோம். அங்கு பெண்கள் கூடி நின்று அவர்களை கைது செய்யவிடாமல் தடுத்தனர். அந்தப் பெண்களுடன் பேச்சு நடத்தியபோதும் அவர்கள் கைது செய்ய அனுமதிக்கவில்லை.

இதனால் நாங்கள் திரும்பிச் செல்வதற்கு முடிவு செய்தோம். நாங்கள் அங்கிருந்து திரும்பிச் சென்ற போது பொலிஸ் வாகனத்தின் மீது கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. வாகனமும் சேதமாக்கப்பட்டிருந்தது. பொலிஸார் அச் சம்பவ இடத்தில் எவர் மீதும் தாக்குதல் நடத்தவில்லை.

இதன் பின்னர் அன்று இரவு அப்பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவர் வைத்தியசாலைப் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் தன்னைப் பொலிஸாரே தாக்கினர் எனத் தெரிவித்திருந்தார்.

இச்சம்பவம் தொடர்பாகவும் நாங்கள் விசாரணைகளை மேற்கொண்டிருந்தோம். இதன்படி வைத்தியரிடம் குறித்த பெண் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பில் பரிசோதித்து மருத்துவ அறிக்கை கோரியிருந் தோம். அந்த அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை.

இவ்வாறு பெண் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் சாட்சியம் சொல்லவும் இல்லை. இதன் பின்னர் பொலிஸார் எடுத்த நடவடிக்கையின் படி கப்பம் கோரிய 3 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இருப்பினும் பெண் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தனியான விசாரணையினை நடத்தி வருகின்றார். – என்றார்.

இதேவேளை, நாகர்கோவில் பகுதியில், வெளிநாடுகளில் இருந்து வருபவர்களை அச்சுறுத்தி கப்பம் கோரும் சம்பவங்கள் அதிகளவில் நடைபெறுகின்றன. இருப்பினும் யாரும் துணிந்து முறைப்பாடு செய்வதில்லை. கப்பம் கோரப்படுவது தொடர்பாக முதலில் கிடைத்த முறைப்பாடு இது ஒன்றுதான்.

**கைதுசெய்ய விடாமல் பெண்கள் தடுக்கின்றனர்**

நாகர்கோயில் பகுதியில் வேறு குற்றங்களில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யச் செல்லும் போதும், பெண்கள் தான் முன்னே வந்து அவர்களை கைது செய்யவிடாமல் எம்மை தடுத்து, குற்றத்தில் ஈடுபட்டவர்களைத் தப்பிக்க வைக்கின்றார்கள்.

நாங்கள் கைது செய்யச் செல்லும் குற்றவாளி ஆண்களாக உள்ளதால், பெண் பொலிஸாரை அழைத்துச் செல்வதில்லை.

**பிறந்தநாளுக்கு வாளால் கேக் வெட்டுகின்றனர்**

குறிப்பாக அங்குள்ளவர்கள் தமது பிறந்தநாள் கொண்டாட்டங்களின் போது பெரிய வாளால் கேக் வெட்டுகின்றனர். அவ்வாறு வெட்டும்போது எடுக்கப்படும் படங்களை அவர்கள் முகப்புத்தகங்களில் தரவேற்றி அனைவருக்கும் பகிர் கின்றனர். இது ஆரோக்கியமான சமூக வளர்ச்சிக்கு உதவாது. – என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் –

வெளிநாடுகளில் இருந்து வருபவர்களை அச்சுறுத்தி அவர்களிடம் இருந்து பெரும் தொகை பணத்தைக் கப்பமாக கோருகின்ற சம்பவங்கள் இங்கு அதிகரித்துள்ளது. இவ்வாறு கப்பம் கோரும் நபர்கள் தொடர்பான தகவல்களை பொலிஸாருக்கு வழங்கவும் பாதிக்கப்பட்டவர்கள் அஞ்சுகின்றார்கள்.

கப்பம் கோரும் கலாசாரம் அதிகரித்துச் செல்வது நல்லதாக அமையாது. இவ்வாறான கப்பம் கோருபவர்கள் தொடர்பான தகவல்களைப் பொலிஸாருக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தந்தால் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவர்களைக் கண்டு பொது மக்கள் அஞ்சத் தேவையில்லை. – என்றார். (ம)

## சிறுமிகள் காணாமற்போகும் சம்பவங்களை முறைப்பாடாக பதியப் பொலிஸார் மறுப்பு!

### சிறுவர், பெண்கள் உத்தியோகத்தர் கௌதமன் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.05

யாழ்.மாவட்டத்தில் காணாமற் போகும் சிறுமிகள் தொடர்பான முறைப்பாடுகளை, காதலைக் காரணம் காட்டி பொலிஸார் ஏற்க மறுக்கின்றனர் என மாவட்ட சிறுவர் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கௌதமன் பொலிஸார் மீது குற்றஞ்சாட்டினார்.

நேற்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

மேற்படிக் கூட்டத்தில் யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண, வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன், யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்கசர் கஸ்ரன் மற்றும் காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் முன்னிலையிலேயே பொலிஸார் மீதான மேற்படிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அங்கு மாவட்ட சிறுவர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கௌதமன் மேலும் தெரிவிக்கையில் –

16 வயதுச் சிறுமி ஒருவரைக் காணவில்லை என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் அவருடைய பெற்றோரினால் அண்மையில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இதேபோன்ற முறைப்பாடு ஒன்று வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார், அவர் காதல் தொடர்பினால் வேறு ஒருவருடன் சென்றுவிட்டார் என்று கூறியுள்ளனர். அத்துடன், முறைப்பாட்டை மீளப்பெற்றுக்கொள்ளுமாறும் பெற்றோர்களை அச்சுறுத்தியுள்ளனர்.

காணாமல்போன பிள்ளை உயிருடன் இருக்கின்றதா என்று கூடத் தெரியாத நிலையில் பெற்றோர்கள் எவ்வாறு முறைப்பாட்டை மீளப் பெறமுடியும்? இவ்வாறான விடயங்களில் பொலிஸார் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும். – என்றார். (ம)

## யாழ்ப்பாணத்தில் 90 வீதமான சாரதிகள் வீதி ஒழுங்குகளை கடைப்பிடிப்பதில்லை

### யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கஸ்ரன் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.05

யாழ்.மாவட்டத்தில் வாகனம் செலுத்தும் 90 வீதமானவர்கள் வீதி ஒழுங்கு, விதிகளை உதாசீனம் செய்கின்றனர் என்று குற்றஞ்சாட்டியுள்ள யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கஸ்ரன் ஸ்டனிஸ்லஸ், இதனாலேயே வீதி விபத்துக்களும் பரிதாப மரணங்களும் அதிகரித்துள்ளன எனவும் கூறினார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேற்படிக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள், தற்போது அதிகரித்துள்ள வீதி விபத்துக்கள் தொடர்பாக அதிக கரிசனையை வெளிப்படுத்தியமையுடன், அவற்றைக் குறைக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்தபோதே பொலிஸ் அதிகாரி மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், யாழ். மாவட்டத்தில் 20 ஆயிரம் வரையான மோட்டார் சைக்கிள்கள் வீதிகளில் பயணிக்கின்றன.

இவ்வாறான வாகனங்களை ஓட்டுபவர்களில் 90 வீதமானவர்கள் வீதி ஒழுங்குமுறைகளை உதாசீனம் செய்கின்றார்கள். இதனால் அதிகளவிலான விபத்துக்கள் இடம்பெறுகின்றன. இவ்வாறானவர்களுக்கு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. – என்றார். (ம)

## பேருந்துகளில் அதிக பயணிகள் வெயில் காலத்தில் அசௌகரியம்

### நடவடிக்கை எடுக்கக் கோருகின்றனர் பயணிகள்

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பேருந்துகள் அளவுக்கு அதிகமாகப் பயணிகளை ஏற்றிச் செல்வதால் அதில் போக்குவரத்துச் செய்யும் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சுட்டெரிக்கும் வெயிலுக்கு மத்தியிலும் பேருந்துகளில் அதிகளவு பயணிகள் ஏற்றிச்செல்லப்படுகின்றனர். கடும் வெப்பம் காரணமாக பயணிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

குறிப்பாக, யாழ். – கொடிகாமம் சேவையில் ஈடுபடுகின்ற தனியார் பேருந்துகள் அளவுக்கு அதிகமாகப் பயணிகளை ஏற்றிச் செல்கின்றன என அதில் தினமும் பயணிப்போர் தெரிவிக்கின்றனர்.

கிழமை நாள்களில் காலை 7.30 தொடக்கம் 9 மணி வரையான நேரத்திலும் அலுவலகங்கள் முடிவடையும் பிற்பகல் வேளைகளிலும் அதிகமான பயணிகள் பேருந்துகளில் பயணம் செய்வதால் அந்த நேரத்தில் மேலும் சில பேருந்துகளை சேவையில் இணைத்து நெருக்கடியைக் குறைக்க தனியார் பேருந்து சங்கம் முன்வர வேண்டும் எனவும் பயணிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அதிக பயணிகளை ஏற்றுவதால் பெண்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். தற்போது வெப்பம் அதிகரித்துள்ள நிலையில், அதிக பயணிகளை ஏற்றுவதால் சுவாசிப்பதில் கூட சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அளவுக்கு அதிகமாகப் பயணிகளை ஏற்றிச்செல்லும் அரச மற்றும் தனியார் பேருந்துகள் விடயத்தில் போக்குவரத்துப் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பயணிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ம)

### மாணவருக்காகத் தயாரிக்கப்பட்ட

## 'இனியதைச் செய்வோம்' தெரு நாடகம் இன்று நாவற்குழிப் பாடசாலையில்

தென்மராட்சி வலய ஆசிரியர்களின் நெறியாள்கையில் உருவான 'இனியதைச் செய்வோம்' என்ற தெரு நாடகம் பாடசாலைகளில் இடம்பெற்று வருகின்றன.

போதைப்பொருள் பாவனை, சிறுவர் மீதான துர் நடவடிக்கைகள் போன்ற விடயங்களை உள்ளடக்கிய இந்தத் தெரு நாடகம் 'வேள்ட் விஷன்' நிறுவன அனுசரணையுடன் நடத்தப்படுகின்றது.

சமூக ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சும், பாடசாலைகளின் பெற்றோர் சங்கமும் இணைந்து தெரு நாடகங்களை நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளன.

இதன் முதலாவது நிகழ்வு நேற்று வரணி மத்திய கல்லூரியில் இடம்பெற்றிருந்தது. இன்று, புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நாவற்குழி மகா வித்தியாலயத்தில் இந்தத் தெரு நாடகம் இடம்பெறும். (இ)

## நாவற்குழியில் விபத்து மாணவன் படுகாயம்

தென்மராட்சி, ஏப்.05

நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் வீதியைக் கடக்க முற்பட்ட மாணவனை ஹயஸ் வாகனம் மோதியதில் அவன் படுகாயமடைந்தான்.

நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் 1.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்த விபத்தில் நாவற்குழி குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த சி.சாந்தன் என்ற மாணவனே படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளான்.

இந்த விபத்துத் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-2)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## நீதி செய்ய முடியாத நீதித்துறை

'நீதி செய்யப்படுவது மட்டுமல்ல, நீதி செய்யப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்' - என்ற ஒரு முதுமொழி நீதித்துறையில் உண்டு.

ஆனால், இலங்கையிலோ அது தலைகீழ். 'நீதி செய்யப்படுவதில்லை என்பது மட்டுமல்ல, நீதி செய்யப்படவும் மாட்டாது என்பது துலாம்பரமாகக் காட்டப்படும்' - என்ற நிலைமையே இங்கு.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குரூரங்கள் எல்லாம் தாராளமாக நடந்தன என்பது சர்வதேசத்துக்கே தெரிந்த உண்மை. அதனால்தான் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராகக் கிடுக்குப்பிடி போட்டு நிற்கின்றது சர்வதேசம்.

அங்கு, சர்வதேசப் பங்களிப்புடனான கலப்பு நீதிமன்றப் பொறிமுறைக்கு ஒப்புக்கொண்ட இலங்கை, இங்கு நாட்டில் வேறு கதை பேசுகின்றது. அதுவே நீதித்துறை விடயத்தில் இலங்கையின் இரட்டை வேடப் போக்கை அம்பலப்படுத்தப் போதுமானதாகும்.

"உள்நாட்டில் நீதியான பொறிமுறை மூலமே இவ்விடயங்களை விசாரிப்போம். இவ்விடயங்களில் பாதிக்கப்பட்ட - அல்லது சம்பந்தப்பட்ட - தரப்புகளின் மனதையும் வெல்லும் வகையில் உள்நாட்டில் நீதியான பொறிமுறை மூலம் விடயத்தைக் கொண்டு செல்வோம்." - என்றெல்லாம் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அடிக்கடி பீற்றுகின்றார்.

ஆனால், இதில் இரண்டு விடயங்களை வெளிவிவகார அமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும்.

முதலாவது - இலங்கையின் அரசபீடத்திடம் - அதாவது ஆட்சியாளர்களிடம் - நடந்து முடிந்து போன கொடூரங்கள் குறித்து உண்மையைக் கண்டறிந்து, நீதியை நிலைநாட்டி, பொறுப்புக்கூறும் செயற்பாட்டை நிலைநிறுத்தும் திடசங்கற்பம் கிஞ்சித்துமே கிடையாது.

அடுத்தது - இலங்கையின் நீதித்துறை, இனப்பிரச்சினை விடயத்தில் நீதி செய்யும் என்று நம்புவதற்கான தகுதி நிலையை எட்டவில்லை. இனிமேலும் எட்டுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் தென்படவில்லை.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றக் கொடூரங்களை நேரில் கண்டு, அனுபவித்து, பாதிப்புற்று, பரிதவித்த பல்லாயிரம் தமிழர்கள் இன்றும் அது பற்றிய பயங்கர நினைவுகளோடும், பாதிப்பின் கொடூர விளைவுகளோடும் அல்லாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களுக்கு மத்தியில் வந்து நின்றுகொண்டு, அரசின் சிரேஷ்ட அமைச்சர் ராஜித சேனாரத்ன - அதுவும் நல்லாட்சி அரசின் பேச்சாளர் என்று கூறிக்கொள்பவர் - ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மிக நெருக்கமானவர் என்று நம்பப்படுகின்றவர் - "இந்த நாட்டிலே யுத்தக் குற்றமே இழைக்கப்படவேயில்லை. அப்படியிருக்கையில் அதற்கான விசாரணை எதற்கு?" - என்று பகிரங்கமாக - படுதுணிச்சலாகக் கேட்கின்றார்.

விசாரிப்பதற்கு முன்னரே தீர்ப்பைக் கூறிவிடும் நிலையில் அரசுத் தலைமை இருக்கும் போது, அத்தகைய அரசிடமிருந்து நீதி கிட்டும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பசப்பு வார்த்தைகளில் பேசுவதில் அர்த்தமில்லை.

அடுத்தது - இலங்கையின் நீதித்துறை பற்றியது.

உரிய அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு அமைய நியமிக்கப்பட்ட ஒரு நீதிபதி - அதுவும் தமிழ் நீதிபதி - பதவியேற்று தமிழ்ப் பிரதேசத்தில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுச் செயற்பட்டு வருகையில், பெரும்பான்மையினத் தரப்பின் கட்டுப்பாட்டில் இயங்கும் நீதித்துறை சார்ந்த இரு பொது அமைப்புகள் - இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும், நீதிபதிகள் சங்கமும் - சட்ட முறையற்ற விதத்தில் அவரைப் பதவி விலக்க எடுத்திருக்கும் எத்தனம் அடுத்த விடயம். இதில் இந்த இரண்டு அமைப்புகளும் முன்னெடுத்த குளறுபடி நடவடிக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட எம்.பியும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் விலாவாரியாக அம்பலப்படுத்தி இருக்கின்றார்.

பெரும்பான்மையினத்தவரான கிறிஸ்தோபர் வீரமந்திரி தமது நாற்பதாவது வயதில் வெறும் சட்டத்தரணியாக இருந்த நிலையில், உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார். தனிப்பட்ட சட்டத்தரணியாக நீதிமன்றத்தில் வழக்குகளில் முன்னிலையாகிக் கொண்டிருந்த சிரேஷ்ட சட்டத்தரணியான நெவில் சமரக்கோனை நாட்டின் பிரதம நீதியரசராகவே நேரடியாக நியமித்தார் ஜனாதிபதி ஜெயவர்த்தனா. சட்டத்தரணியாகப் பதவிப் பிரமாணம் செய்த பின்னர், நீதிமன்றத்தில் வழக்குகளில் முன்னிலையாகாமல் சட்ட ஆலோசனை மட்டும் வழங்கிக் கொண்டிருந்த ஷிராணி பண்டாரநாயக்கவை மேன்முறையீட்டு நீதியரசராக நியமித்தார் ஜனாதிபதி சந்திரிகா. அந்த ஷிராணி பண்டாரநாயக்கவே பின்னர் பிரதம நீதியரசராகி, துணிச்சலான தீர்ப்பு வழங்கியமைக்காக மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரப்பீடத்தால் பெரும் நெருக்குவாரங்களை எல்லாம் எதிர்கொண்டார்.

இந்த முன்னுதாரணங்கள் எல்லாம் இருக்கத்தக்கதாகவே, நீதிபதி இராமநாதன் கண்ணனின் நியமனத்தில் - அவர் தமிழர் என்பதால் - பாகுபாடாக நடந்து கொள்கின்றது இலங்கையின் நீதித்துறை சார்ந்த இரு அமைப்புகள்.

இலங்கை நீதித்துறை இன்னமும் கேவலத்துக்குள்ளான நிலையிலிருந்து மீளவில்லை - மீளாது - என்பதற்கு இதுவும் அசைக்க முடியாத ஓர் உதாரணம்தான்.

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை; மே 15 இற்குப் பின்னரே முடிவு!

### 27 நிபந்தனைகளில் முன்னேற்றம் கண்டுள்ளதா அரசு?

கொழும்பு, ஏப்.05

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்கு வழங்கப்படுமா, இல்லையா என்பது தொடர்பான தீர்மானம் எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதியின் பின்னர் அறிவிக்கப்படவுள்ளது.

ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதி வரிச்சலுகை ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கைக்கு மீள வழங்குவது குறித்த அறிக்கை கடந்த டிசெம்பர் மாதம் ஐரோப்பிய ஆணைக்குழுவால் ஐரோப்பிய நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை இலங்கை அரசு மீளப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கும் 27 நிபந்தனைகளில் அரசு முன்னேற்றம் காண வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் டொனால் டஸ்கி தெரிவித்திருந்தார். இந்த உடன்படிக்கையிலும் இலங்கையைச் சாத்திட்டிருந்தது.

இந்த நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நிபந்தனைகளில் முன்னேற்றம் காண இலங்கை அரசுக்கு 6 மாத கால அவகாசம் கொடுக்கப்பட்டது. அதன்படி அடுத்த மே மாதத்துடன் 6 மாதங்கள் நிறைவடையவுள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பு வந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் சூன் லெய் மார்க் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவது தொடர்பில் மே மாதம் 15 ஆம் திகதியின் பின்னர் அறிவிக்கப்படும். அதுவரை ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடுகள் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்குவது தொடர்பாகக் கருத்துக் கூறமுடியும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடுகள் எதிர்க்கும் பட்சத்தில் இலங்கைக்கு குறித்த வரிச்சலுகை கிடைக்காது. எனவே, அரசு மேற்கொண்டுள்ள முன்னேற்றகரமான நடவடிக்கைகளின் அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இலங்கை தொடர்பில் தீர்மானிக்கும்.

எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதிவரை எந்தவொரு நாடும் எதிர்ப்புத் தெரிவிக்காவிடின் இலங்கைக்கு பூரணமாக ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிடைக்கும் என்று தெரிவித்துள்ளார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட 7 ஆயிரத்து 300 பொருள்களை ஐரோப்பிய நாடுகளின் சந்தையில் வரியின்றி ஏற்றுமதி செய்யும் முகமாக ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ளது.

மஹிந்த அரசின் காலத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் விதிமுறைகள் மீறப்பட்டதால் மேற்படி வரி இல்லாமல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அடையாளம் காட்டாமல் இருப்பதற்கு ரூ.5 லட்சம் தருவதாக பேர முயற்சியாம்!

### ஹம்சிகா கொலை வழக்குத் தொடர்பில் நீதிமன்றில் தெரிவிப்பு

அடையாள அணிவகுப்பில் தம்மை அடையாளம் காட்டாது விட்டால் 5 லட்சம் ரூபாய் பணம் வழங்குவதாக ஊர்காவற்றுறைக் கர்ப்பிணிப் பெண் படுகொலை தொடர்பான சந்தேக நபர்களால் பேரம் பேசப்பட்டது என்று ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை, சுருவில் பகுதியில் வைத்து 7 மாதக் கர்ப்பிணிப் பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது மேற்படி சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள், அடையாள அணி வகுப்பில் தங்களை அடையாளம் காட்டாது விட்டால் 5 லட்சம் ரூபா பணம் வழங்குவோம் எனப் பேரம்பேசினர் என்று நீதிமன்றுக்குக் கூறப்பட்டது.

இந்த வழக்கின் சாட்சியாக உள்ள வாய் பேச முடியாத சிறுவன் தம்மை அடையாளம் காட்டாது விட்டால் அந்தச் சிறுவனின் குடும்பத்திற்கு ஐந்து லட்சம் ரூபா பணம் தருவோம் எனச் சந்தேகநபர்கள் கூறினர் எனச் சட்டத்தரணி ஊடாக நீதிவான் ஏ.எம்.எம். றியாழின் கவனத்திற்குக்கொண்டுசெல்லப்பட்டுள்ளது. சிறுவனின் உறவு முறையைச் சேர்ந்த ஒருவர் சிறைச்சாலையில்தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அதனை அறிந்த சந்தேக நபர்கள் சிறுவனின் உறவுகாரருடன் பேசியுள்ளனர். இது குறித்து சிறுவனின் தாயிடம் கேட்கப்பட்டதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரம் பேசிய சிறுவனின் உறவுக்காரரிடம் பொலிஸார் வாக்கு மூலம் எடுத்துக்கொண்டுள்ளமையுடன் அந்த விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதிவான்உத்தரவுபிறப்பித்துள்ளார்.

ஏழு மாதக் கர்ப்பிணிப் பெண் ஹம்சிகா (வயது-27) கடந்த ஜனவரி 24 ஆம் திகதி யாழ். ஊர்காவற்றுறைப் பகுதியில் அமைந்துள்ள தனது இல்லத்தில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# தேசிய வலுசக்தி கொள்கை தயாரிக்க யோசனை கேட்கும் மின்வலு அமைச்சர்

தேசிய வலுசக்தி கொள்கை தயாரிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. இதற்கான கருத்துக்களும், யோசனைகளும் பெற்றுக் கொள்ளப்படும் என்று மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதுதொடர்பாக அவர் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தேசிய வலுசக்தி கொள்கை மூலம் சரியான வலுசக்தி கொள்கையைத் தயாரிப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

மின்சார கட்டணத்தை உயர்த்துவது தொடர்பாக இதுவரை எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை. மின்சார கட்டணத்தை உயர்த்துவதற்கு அரசும் எதிர்பார்க்க வில்லை.

நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைவாக இருக்கின்ற போதும், தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்கு அதிக செலவு ஏற்பட்டாலும் மின்சார விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.

இதேவேளை, இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன என்று பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா குறிப்பிட்டார்.

இதன் கீழ் 60 மின்சார உற்பத்தி நிலையங்களுக்கு கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

நாட்டின் வலுசக்திக் கட்டமைப்பு புதிப்பிக்கக் கூடிய வலுசக்தி கட்டமைப்பாக மாற்றுவது இலக்காகும்.-என்றார்.(ஐ)




வீதி விபத்துக்களை தவிர்ப்போம்!

ரயில்வேக் கடவையை கடக்கும்போது வீதி ஒழுங்கைக் கடைப்பிடிப்போம். அபாய ஒலி, பாதுகாப்புக் கதவு மூடியிருத்தல், சிவப்பு ஒளிச் சமிக்ஞை ஒளிர்தல் போன்ற வேளைகளில் ரயில்வேக் கடவையைக் கடப்பதனை தவிர்ப்போம்!

தகவல் : சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை/ மாநகரசபை, யாழ்ப்பாணம்.

### நாளை

06.04.2017
வியாழக்கிழமை


நட்சத்திரம் : ஆயிலியம் பி.இ 1.20 வரை
திதி : தசமி பி.ப 12.15 வரை

சுபநேரம் : 7.38 – 9.08 வரை
இராகுகாலம் : 1.38 – 3.08 வரை

காலைக்கதிர்
புதன்கிழமை 05.04.2017 05

# அதிசிறப்பு வைத்தியசாலையாகத் தெல்லிப்பழை; மாவட்டப் பொது வைத்தியசாலையாக மந்திகை!

## தரம் உயர்த்தப்படும் என்று சுகாதார அமைச்சர் ராஜித உறுதி



யாழ்ப்பாணம், ஏப்.05

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை அதிசிறப்பு வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்படும் என்றும் மந்திகை ஆதார வைத்தியசாலை மாவட்ட பொது வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப் படும் என்றும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன உறுதியளித்தார்.

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்திருந்த அமைச்சர் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தெல்லிப்பழை வைத்திய சாலை யின் கீழ் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, உளநல சிகிச்சைப் பிரிவு ஆகியவற்று டன் இணுவிலில் அமையவுள்ள சிறுவர் வைத்தியசாலையும் இணைக்கப்பட்டு தரமுயர்த்தப்படவுள்ளது.

2017 ஆம் ஆண்டு வேலைத் திட் டத்தின் கீழ் மத்திய அரசால் ஒதுக்கப் பட்ட நிதியில் இருந்து இணுவிலில் சிறுவர் வைத்தியசாலை அமைக்கப் படவுள்ளது.-என்றார்.

எமது தெல்லிப்பழை ஆதார வைத் தியசாலையைத் தரமுயர்த்துமாறு பல வேறு தரப்புகளிடமும் அரசியல் பேத மின்றி நீண்ட காலமாகக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், தற் போது இந்தக் கோரிக்கை சுகாதார அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள் ளது என்று தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் அபி விருத்திச் சங்கம் மகிழ்ச்சி தெரிவித் துள்ளது.

வைத்தியசாலை நிலைமைகளை நேரில் வந்து பார்வையிட்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நாடாளுமன்றத்திலும் வைத்தியசாலை தரமுயர்த்தல் தொடர் பாக அரைமணிநேரம் நீண்ட உரை ஆற்றியமையும் அந்த உரை நாடாளு மன்றப் பதிவேட்டில் இடம்பெற்றமையும் இதற்கு ஒரு காரணமாக உள்ளது என் றும் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் நோயாளர் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா, சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜய கலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப் பினர் இ.அங்கஜன் மற்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்திய லிங்கம், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகி யோரும் வைத்தியசாலையின் தரமு யர்த்தலின் அவசியத்தையும் அவசரத் தையும் உணர்ந்து குரல்கொடுத்தார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டத்திலும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத் திலும் வலி. வடக்குப் பிரதேச சபை, வலி. தெற்கு பிரதேச சபை அமர்வுகளிலும் வைத்தியசாலை தரமுயர்த்தல் தொடர் பாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட் டிருந்தமையும் குறிப்பிடத்தகது.(ஐ)

*மத்திய வங்கியின் பிணை முறி மோசடி:*

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் காலத்தை நீடிப்பதற்கு யோசனை

கொழும்பு, ஏப்.05

இலங்கை மத்திய வங் கியின்பிணைமுறிமோசடி தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக் கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின்பதவிக் காலத்தை மேலும் மூன்று மாதங்களால் நீடிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்திருக் கின்றார் என்று தெரியவரு கின்றது.

கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி நியமிக்கப் பட்ட இந்த ஆணைக்குழு மூன்று மாதங்களுக்குள் தனது விசாரணை அறிக் கையை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந் தது.

எனினும், விசாரணை கள் தொடர்ந்து நடந்து வரும் நிலையில் அதன் பதவிக் காலத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருக்கின்றார் என்று ஆணைக்குழு வட் டாரங்கள் தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வேலணை பிரதேச வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம் திறப்பு



யாழ்ப்பாணம், ஏப்.05

வேலணை பிரதேச வைத்தியசாலையில் புதி தாக அமைக்கப்பட்டுள்ள வெளிநோயாளர் பிரிவு கட்டடம்சுகாதாரபோஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவால் நேற்று முன்தினம் திறந்து வைக் கப்பட்டது.

சுதந்திர சுகாதார சேவையை வலுப்படுத் தும் நோக்கத்தை முன் மாதிரியாகக் கொண்ட திட்டத்தின்கீழ்வேலணை பிரதேச வைத்தியசாலை யில் வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம் அமைக் கப்பட்டது.

இந்நிகழ்வில் நாடாளு மன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், சி.சிறி தரன், வடமாகாண சுகா தார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், மேலதிக மாவட்ட செய லாளர் சு.தெய்வேந்திரம், சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர், வைத்தியர்கள் மற் றும் துறை சார் அரச திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ஐ)

## மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த நிதி மானியம் வழங்கல்

துறைமுக நகர அபி விருத்திசெயற்றிட்டத்தின் ஊடாக மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்து வதற்காக நிதி மானியங் களைப் பெற்றுக் கொடுக் கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தச்செயற்றிட்டத்தை நிர்மாணிப்பதற்காகமணல் அகழப்படும் இடங்களில் உள்ள முருகைக்கற் பாறை கள்மற்றும்கடலுயிர்களின் இன விருத்தி வலயங்கள் பாதிக்கப்படுகின்றன என்று மீனவர்கள் அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தனர்.

எனினும், நாரா என்னும் நிறுவனம் மேற் கொண்ட ஆய்வுகளின் படி அந்தப் பிரதேசங்களின் கடலுயிர் களின் இனவிருத்திக்கு எந்தவித பாதிப்பும் ஏற்பட வில்லை என்று தெரிய வந்துள்ளது.

அதேபோன்று, குறிப் பிடத்தக்க பிரதேசங்களில் முருகைக் கற்களோ வேறு கற்பாறைகளோ இல்லை என்று உறுதி செய்யப்பட் டுள்ளது என்று மீன்பிடித் துறை அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், எந்த வொரு மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்துக்கேனும் இதனூடாகப் பாதிப்பு ஏற் படுமாயின் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்து வதற்கு வேலைத்திட்டங் கள் முன்னெடுக்கப்பட உள்ளன என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

மீனவர்களின் வாழ்வா தாரத்தை உயர்த்தநிதிமானி யங்களை வழங்க வேண் டும்என்றுதுறைமுகஅமைச் சரால் துறைமுக நகர அபி விருத்தி செயற்றிட்ட பிரிவிடம் கோரப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹெரோயினுடன் ஒன்பது பேர் கைது!



கொழும்பு, ஏப்.05

ஹெரோயின்போதைப் பொருளை வைத்திருந்த ஒன்பது பேர் ஹட்டன் மதுவரி திணைக்கள அதி காரிகளால் நேற்று முன் தினம் இரவு கைது செய் யப்பட்டுள்ளனர்.

அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவ லொன்றை அடிப்படை யாகக் கொண்டு ஹட்டன் மற்றும் குடாகம பிரதே சத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இந்த நபர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சந்தேக நபர்களைச் சோதனை யிட்ட போது அவர்களிட மிருந்து 645 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோ யின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட ஒன்பது பேரும் ஹட்டன் மற்றும் குடாகம பகுதி யைச்சேர்ந்தவர்கள் என்று மது வரி திணைக்கள அதிகாரி கள் தெரிவித் துள்ளனர்.

## அமைச்சர் பதவியை இராஜினாமா செய்ய ஆலோசிக்கிறாராம் ரிசாத்?



கொழும்பு, ஏப்.05

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் ரிஷாத் பதியு தீன், தன்னுடைய அமைச் சர் பதவியை இராஜினா மாச் செய்வதற்குக் கலந் தாலோசித்து வருகிறார் என்று தகவல்கள் வெளி யாகியுள்ளன.

வில்பத்து சரணாலயத் துக்கு வடக்காக உள்ள காடுகளில் நான்கு காடு களை, பாதுகாப்பான சர ணாலயங்களாக பிரகட னப்படுத்தி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வால் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதியன்று வெளியிடப் பட்ட வர்த்தமானி அறி வித்தலுக்கு எதிர்ப்பை தெரிவித்தே, அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தன்னு டைய அமைச்சுப் பதவி யைத் துறப்பதற்குத் தீர் மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சர்ச்சைக் குரிய இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில், பேச்சு நடத்துவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கேட்டி ருந்த போதிலும், அவர் நேரம் ஒதுக்கிகொடுக்க வில்லை என்றும் இந்த நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வைச் சந்தித்த அமைச்சர் ரிஷாத், இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு தன்னு டைய கடும் எதிர்ப்பை வெளிக் காட்டியுள்ளார் என்றும் தெரியவருகிறது.

இவ்வாறானநிலைமை களில், அரசில் தன்னால் தொடர்ந்து இருக்க முடி யாது என்றும், அமைச்சு பதவியை இராஜினாமாச் செய்யப்போகிறார் என் றும் அவர் அறிவித்துள் ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## காய்ச்சலால் இரு பெண்கள் உயிரிழப்பு!

திருகோணமலை பொது வைத்தியசாலையில், காய்ச்சல் காரணமாக அதிதீவிர பிரிவில் சிகிச்சை பெற்று வந்த பெண்கள் இருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

துறைமுக பொலிஸ் எல்லைக்குட்பட்ட திருகோணமலை - மின்சார நிலைய வீதியில் வசித்து வரும் இரண்டு பிள்ளைகளின் தாயாரான வீ. ராஜலக்ஷ்மி (வயது- 35) மற்றும் சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளிவெட்டியைச் சேர்ந்த ஆனந்த பாபு லெட்சுமி (வயது- 32), ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர்.

தற்போது நாட்டில் டெங்கு மற்றும் எச்1. என்1. வைரஸ் என்பன பரவி வருகின்றமையால், உயிரிழந்தவர்களின் இரத்த மாதிரிகள் எம்.ஆர்.ஐ. பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட உள்ளன என சட்ட வைத்திய நிபுணர் ஜே.சி. சமரவீர தெரிவித்தார். (ச)

# பெரும்பான்மையினரின் அரசியல் பிரதிநிதித்துவத்தை மட்டு. மாவட்டத்தில் ஏற்படுத்த முயற்சிக்கிறது அரசு!

## யோகேஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரச காணிகளில் பெரும்பான்மை இன மக்களைக் குடியேற்றி, இங்கு பெரும்பான்மை இனத்தோரின் அரசியல் பிரதிநிதித்துவத்தை ஏற் படுத்தும் முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்பு கனிஷ்ட வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழர்கள் பூர்வீகமாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவர்களின் இனப் பரம்பலைக் குறைக்கும் வகையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களைக் குடியேற்றி, அதன் மூலம் தங்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றக் கடந்த கால ஆட்சியாளர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாத்திரம் பெரும்பான்மை இனக் குடியேற்ற நடவடிக்கையிலிருந்து ஓரளவு தப்பியிருந்தது. ஆனால், தற்போதைய அரசு தென்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு இங்குள்ள அரசாங்கக் காணிகளைக் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

குத்தகைக்கு பெறப்படும் காணியில் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்போது, தொழில் வாய்ப்புக்காகத் தென்பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தோர் இங்கு குடியேற்றப்படுவார்கள். இதன் மூலம் தமது இனப்பரம்பலை அதிகரிக்க முயற்சிக்கின்றார்கள்.-என்றார். (ச)

## காத்தான்குடிக்கு சபாநாயகர் விஜயம்

சபாநாயகர் கரு ஜயசூரிய, முதன்முறையாகக் காத்தான்குடிக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி விஜயம் செய்யவுள்ளார். இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வின் 25 வருடகால அரசியல் வாழ்க்கையின் நிறைவையொட்டி எழுதப்பட்டுள்ள 'கிழக்கின் வாசல்' எனும் நூல் வெளியீட்டு விழாவில், பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவே, சபாநாயகர் காத்தான்குடிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில், தென்கிழக்குப் பல்கலைகழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் தலைமையில் இந்த நூல் வெளியீட்டு விழா இடம்பெறவுள்ளது. (ச)

## மட்டக்களப்பில் திண்மக்கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் திட்டம்!

மட்டக்களப்பு,ஏப்.05

மட்டக்களப்பில் திண்மக்கழிவுகளை அப்புறப்படுத்தி மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் திட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் எனக் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

கொடுவாமடு திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்துக்கு குப்பைகளைக் கொண்டு செல்வதில் ஏற்பட்ட தாமதத்தை அடுத்து, இது தொடர்பில் ஆராயும் கூட்டம் ஏறாவூர் நகர சபையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகர், ஆரையம்பதி மற்றும் காத்தான்குடி, ஏறாவூர், செங்கலடி ஆகிய பகுதிகளிலுள்ள குப்பைகளைத் தரம் பிரித்து, அவற்றைக் கொடுவாமடுவில் அமைக்கப்பட்டுள்ள திண்மக்கழிவு முகாமைத்துவ மீள்சுழற்சி நிலையத்துக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் . அத்துடன், மேற்படி நகர மற்றும் பிரதேச சபைகளுக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள கழிவுகளை அகற்றும் செயற்பாடு தொடர்பில் அதிகாரிகள் துரிதமாகச் செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## மட்டக்களப்பில் வேகமாகப் பரவுகிறது டெங்கு! 3 மாதங்களில் 1,576 பேர் பாதிப்பு; 4 பேர் சாவு!!

### கடந்த ஆண்டில் 750 பேருக்கு மட்டுமே சிகிச்சை

மட்டக்களப்பில் டெங்குக் காய்ச்சல் காரணமாக இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்து 576 பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என அந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் எம்.எஸ்.இப்றாலெப்பை தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். கடந்த மார்ச் மாதத்தில் மாத்திரம் டெங்கு நோயால் சுமார் 750 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் . கடந்த ஆண்டில் 501 டெங்கு நோயாளர்கள் மாத்திரமே அடையாளம் காணப்பட்ட நிலையில், இந்த ஆண்டின் ஆரம்பத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். டெங்குக் காய்ச்சலின் தாக்கம் மேலும் நீடிக்குமாயின் மிக மோசமான பாதிப்பு ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# நெருக்கடியான இன்றைய அரசியல் சூழ்நிலையில் முஸ்லிம் மக்களின் பலம் ஒருமித்திருக்க வேண்டும்

## சம்மாந்துறை நிகழ்வில் மன்சூர் எம்.பி.

நிந்தவூர், ஏப்.05

''புதிய அரசமைப்பு மாற்றம், இனப்பிரச்சினைக்கான தீர்வு போன்ற முக்கிய விடயங்களை நோக்கி நாடு பயணிக்கும் இக்கால கட்டத்தில் முஸ்லிம்களின் அரசியல் பலம் ஒருமித்ததாக அமைய வேண்டும்.''

- இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அணித்தலைவருமான எம்.ஐ.எம்.மன்சூர் கூறினார்.

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய, சம்மாந்துறைப் பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத்தின் 16 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சம்மாந்துறைப் பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத் தலைவர் ஏ.எல்.எம்.யாசீன் தலைமையில், சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.மன்சூர் விசேட அதிதியாகக் கலந்து கொண்டார் அத்துடன், ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய அம்பாறை மாவட்டத் தலைவர் எஸ்.செல்லத்துரை, மாவட்ட செயலாளர் ஏ.எல்.எம்.அமீன் உட்பட சிறப்பு அதிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

மன்சூர் எம்.பி.தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

வடக்கு - கிழக்கு இணைப்பு, முஸ்லிம்களின் வகிபாகம் என்பனவும் எம் முன்னே பேசப்படும் முக்கிய விடயங்களாக மாறியுள்ளன.

பல்வேறு எதிர்பார்ப்புகளுடனும், நம்பிக்கைகளுடனும் சிறுபான்மைச் சமூகங்கள் மலரச் செய்த நல்லாட்சியிலும் கடும்போக்குச் செயற்பாடுகளும், பௌத்த பேரினவாத செயற்பாடுகளும் தலைதூக்கி வருகின்றமை கவலையளிப்பதாகவே உள்ளது.

இன்றும் கூட ஆட்சி அதிகாரப் பரப்புக்குள் இனவாதம், கடும்போக்குவாதம் கூர்மைப்பட்ட வண்ணமே உள்ளது.

எமது மூதாதையர் காலம் முதல் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளை அம்பாறை எல்லைப்பகுதியில் கபளீகரம் செய்யும் சதிகள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன.



இவற்றையெல்லாம் கண்டு கொள்ளாதவர்களாக நாம் இருந்துவிட முடியாது. இருப்பினும் உடனடியாக, அவசரமாக ஆத்திரங்களை அவசரப்பட்டுத் தீர்க்கவும், உணர்ச்சி அறிக்கைகளைவிடவும் முனையாது, மிகப் பக்குவமாக, இராஜதந்திரமாக நாம் விடயங்களைக் கையாள வேண்டும்.

முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை இத்தகைய அணுகு முறைகளையே கையாண்டு வருகின்றது.

### பெரும் சவால்

இந்த நிலையில், எமக்குள் ஒற்றுமையின்மை என்பதே பெரும் சவாலாக உள்ளது. எமக்குள் ஒற்றுமையில்லாவிட்டாலும் - எமது அரசியல் பலம் ஒன்றுபட்டதாக இல்லாவிட்டாலும்- நாம் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டிய நிலையே ஏற்படும். குறிப்பாக சிறுபான்மைச் சமூகங்களான முஸ்லிம்களும், தமிழர்களும் தேசிய ரீதியிலான பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

நாம் இன்னும் பிரிந்து நிற்க முடியாது, தமிழர்களும், முஸ்லிம்களும் ஒற்றுமைப்பட்டு ஒருங்கே பயணிக்க வேண்டிய அவசியத்தை நாம் உணர்ந்து செயற்பட வேண்டும்.-என்றார்.

(இ-150)

# முஸ்லிம் உறுப்பினருக்கு இருக்கும் உணர்வு பௌத்தர்களுக்கு இல்லை என்கிறார் மஹிந்த!

கொழும்பு, ஏப். 05

கண்டி, ஸ்ரீதலதா மாளிகைக்கு முன்பாக உள்ள வீதியைத் திறப்பதற்கு முயன்ற போது, மாகாண சபையைச் சேர்ந்த முஸ்லிம் உறுப்பினர் ஒருவரே, முதலாவதாக எதிர்ப்பை வெளியிட்டார். அவருக்கு இருக்கும் உணர்வு கூட, பௌத்தர்களுக்கு இல்லை என்று முன்னாள் ஜனாதிபதியும் எம்.பியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விமலஜோதி தேரரின் 70 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, கொட்டாஞ்சேனையில் உள்ள விஹாரையில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பௌத்தம் தொடர்பான புத்தகங்கள், ஒருகாலத்தில் தேடிக் கொள்ள முடியாத நிலைமையே இருந்தது.

அந்த சந்தர்ப்பத்தில், விமல ஜோதி தேரர் தலையிட்டு, பெரிய செயற்பாடுகளில் ஈடுபட்டு, பௌத்தம் தொடர்பிலான புத்தகங்களை அச்சிட்டு, மக்களுக்கு விநியோகித்தார்.

எனினும், இன்றைய நிலையில் காவியுடைக்கான துணி கூட, நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு அவமானப் படுத்தப்பட்டுள்ளது. மறுபுறத்தில், தலதாமாளிகையின் முன்பாக உள்ள வீதி, எங்களுடைய யுகத்தில் தான் மூடப்பட்டது. எங்களுக்கு தெரியும். பொது மக்கள் சுமார் 4 அல்லது 5 கிலோமீற்றர் தூரம் நடந்தே செல்கின்றனர்.

இறைச்சிக் கடைலொறிகள், பஸ்கள் உள்ளிட்ட சகல வாகனங்களும் தலதாமாளிகைக்கு முன்பாகவே பயணிக்கின்றன. ஆகையினால்தான், புலிப் பயங்கரவாதிகள், தலதாமாளிகையின் மீது, தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தினர்.

இந்த நிலையில், தலதாமாளிகைக்கு முன்பாக உள்ள வீதியை, மீண்டும் திறப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நாங்கள், கூறுகின்றோம் தலதாமாளிகைக்கு முன்பாக உள்ள வீதியைத் திறக்கவேண்டாம். இந்த வீதியை திறப்பதற்கு எதிராக முஸ்லிம் உறுப்பினரே முதலாவதாக, எதிர்ப்பு தெரிவித்தார். அவரிடம் இருந்த பௌத்த உணர்வுகூட, பௌத்தர்களிடம் இல்லை.

ஆகையால், இந்த விவகாரத்திலாவது பௌத்தர்கள் ஒன்றிணையவேண்டும். - என்றும் தெரிவித்துள்ளார்.

## மீரிகமவில் புதிய பாற்பண்ணையை ஜனாதிபதி மைத்திரி திறந்துவைத்தார்!




கொழும்பு, ஏப். 05

மீரிகம பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள கொத்மலை புதிய பாற்பண்ணை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்பட்டது.

தேசிய பால்சார் உற்பத்திக் கைத்தொழிலுக்குப் பெரியளவில் முதலீட்டைச் சேர்க்கும் வகையில் காகில்ஸ் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட புதிய பாற்பண்ணையின் நினைவுப் பலகையை நேற்று முன்தினம் திரைநீக்கம் செய்து ஜனாதிபதி அதனைப் பார்வையிட்டுள்ளார்.

காகில்ஸ் நிறுவனத்தின் 'சருதின' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புலமைப் பரிசில்களும், மடிக்கணினிகளும் ஜனாதிபதியால் இதன்போது வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான அர்ஜுன ரணதுங்க, பீ.ஹரிசன், காகில்ஸ் லங்கா நிறுவனத்தின் தலைவர் லுவிஸ் பேஜ், பிரதித் தலைவர் ரஞ்சித் பேஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## விழும் நிலையில் மின் விளக்கு; நாடாளுமன்றத்தில் பரபரப்பு!

கொழும்பு, ஏப். 05

நாடாளுமன்றத்தின் நடுவில் பொருத்தப்பட்டுள்ள அதிக சக்தி கொண்ட அலங்கார மின் விளக்கு திடீரென விழும் நிலைக்கு சென்றதால் நேற்று முன்தினம் பரபரப்பு ஏற்பட்டது.

செப்பு மற்றும் பிற உலோகங்களால் நிர்மாணிக்கப்பட்டு வெள்ளி முலாம் பூசப்பட்ட மின்விளக்கு அங்கு பொருத்தப்பட்டுள்ளது.

இந்த மின் விளக்கு மாதம் ஒரு முறை கீழே இறக்கப்பட்டு சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் இருந்த இடத்திலேயே பொருத்தப்படும்.

அதனை கீழே இறக்கும் போதும் உரிய உயரத்தில் நிறுத்தப்படும் பின்னர் ஏணியின் உதவியுடன் அதனைச் சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



மின் மோட்டார் ஊடாக மேலே கீழே இறக்கி ஏற்றப்படும் அந்த மின் விளக்கை இருந்த இடத்தில் பொருத்தும் சந்தர்ப்பத்தில் திடீரென நிலத்துக்கு இரண்டு அடி மட்டம் வரையில் கீழே வேகமாக இறங்கியுள்ளது.

மின் விளக்கைப் பொருத்தும் நடவடிக்கையில் ஈடுபட்ட ஊழியர் உடனடியாக செயற்பட்டு, மின்விளக்கை மீண்டும் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டார்.

சம்பவத்தில் பதற்றமடைந்த பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால அந்த இடத்திற்கு வருகை தந்து மின் விளக்கைப் பொருத்தும் வரையில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

இந்த நடவடிக்கைகள் நிறைவடையும் வரையில் நாடாளுமன்றத்திற்குள் எந்தவோர் உறுப்பினரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## பௌத்தரின் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரியுடன் பேச்சு!

கொழும்பு, ஏப். 05

சிங்கள பௌத்தர்களின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது.

தற்போது சிங்கள பௌத்த சமூகம் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் ஜனாதிபதிக்கும் பௌத்த மதத் தலைவர்களுக்கும் இடையில் இன்று சந்திப்பு நடத்தப்படவுள்ளது.

கண்டியில் இன்றைய தினம் இந்த பேச்சு நடத்தப்படவுள்ளதாக அஸ்கிரிய பீட அனுநாயக்கதேரர் ஆன மடுவே தம்மதஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.



மேலும், ஜனாதிபதியும் அரசாங்கமும் சிங்கள பௌத்த சமூகம் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கத் தவறினால் பௌத்த மாநாயக்க தேரர்கள் அரசுக்கு எதிராக சில எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிடலாம் என தம்மதஸ்ஸி தேரர் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.தே.கவில் ரணிலுக்கு இணையாக சரத் பொன்சேகாவுக்கு முக்கியத்துவம்!

### கட்சியின் உப தலைவர் பதவி வழங்கப்படுமா?

கிரிபத்கொடவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பேரணியில் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இணையாக, அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

பேரணியைப் பார்வையிடும் மேடையில், ஐ.தே.கவின் ஏனைய தலைவர்களுடன், ரணில் விக்கிரமசிங்கவும், சரத்பொன்சேகாவும் அருகருகே அமர்ந்திருந்தனர்.

மேடையில்கட்டப்பட்டிருந்த பதாதையின் ஒரு பக்கத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் படமும், மற்றொரு பக்கத்தில் சரத் பொன்சேகாவின் படமும் பொறிக்கப்பட்டிருந்தன.

அத்துடன், பேரணி நடத்த பகுதியில் வைக்கப்பட்டிருந்த பதாகைகளிலும், இவர்கள் இருவரின் படங்களே பொறிக்கப்பட்டிருந்தன.

போரை வெற்றி கொண்ட பின்னர், அலரி மாளிகையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்டோரின் முன்னிலையில், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேக் வெட்டி கொண்டாடுகின்றமையைக் காட்டும் படமும் பதாகைகளில் இடம்பெற்றிருந்தன.

ஐ.தே.கவில் பெரும் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளநிலையில், சரத்பொன்சேகாவுக்கு கட்சியின் உபதலைவர் பதவி வழங்கப் படவுள்ளதாக கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற பேரணியில் சரத் பொன்சேகாவுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தமை, அவருக்கு முக்கிய பதவியை வழங்க ஐ.தே.க தலைமை முடிவு செய்திருக்கின்றமையே வெளிப்படுத்தியுள்ளது என்று அரசியல் நோக்கர்கள் கருத்துக் கூறுகின்றனர்.



சுன்னாகம் தாளையடி ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தான ''தாளை மலர்'' நூல் வெளியீட்டு விழா அண்மையில் ஆலயத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம். (ஐ- 21)

## தினசரி ராசி பலன் 05.04.2017

துர்முகி வருஷம் 2017 ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் 23 ஆம் நாள் நவமித்திதி. பகல் 10.04 மணி வரை. பின்னர் தசமி. நட்சத்திரம்: பூசம் இரவு 10.52 மணி வரை. பின்னர் ஆயிலியம். சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: பகல் 12.13 மணி முதல் 1.44 மணி வரை. சுபநேரம்: மாலை 4.34 மணி முதல் 6.03 மணி வரை. திவசம் செய்யவேண்டிய திதி: பங்குனிமாத வளர்பிறை தசமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: பூசம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** சஞ்சலமான நாள். இனபந்துக்கள் பகை, தொழில் கஷ்டம், உண்டாகும். எந்தக்கருமத்திலும் எச்சரிக்கை தேவை. போக்குவரவில் தடை, தாமதம், விபத்து உண்டாக இடமுண்டு கவனம்.

**ரிஷபம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். விவசாயிகள் உற்பத்திச் செலவு அதிகரிப்பால் துன்பப்பட வேண்டிவரும்.

**மிதுனம்:** யோகமான பலன்கள் காணப்படுகின்றன. தனலாபம் அதிகரிக்கும். தாய் வழிப் பூர்வீக சொத்துக்களும் வந்துசேரும். திருமண காரியங்கள் சிலருக்கு கைப்பேறும்.

**கடகம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பணப்புழக்கம் சரளமாக இருக்கும். உத்தியோகத்தர் திறமையால் பதவி உயர்வையும் பெறுவார்கள்.

**சிம்மம்:** கவலையான நாள். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்பத்தில் அமைதி குன்றும். முயற்சித்த காரியங்கள் தடைப்பட்டுப் போகும்.

**கன்னி:** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். உத்தியோகத்தர்களுக்கு ஊதிய உயர்வுடன் கூடிய பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கும். வியாபாரிகள் ஏமாற்றமடைவார்கள்.

**துலாம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. செய்யும் தொழிலில் அதிக உழைப்பும், அலைச்சலும் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**விருச்சிகம்:** அதிஷ்டமான நாள். தனலாபம் பெருகும். பூர்வீகச் சொத்தில் தொழில் முதலீடு செய்த வகையில் மேலதிக வருமானம் கிடைக்கும்.

**தனுசு:** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியில் அலைச்சல்கள் அதிகரிக்கும். சிலர் கொடுத்த பணத்தை மீளப் பெறுவதற்கு அலைந்து திரிவார்கள்.

**மகரம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு மத்திமமாக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். பணம் கையாளும் போது எச்சரிக்கை தேவை. பயணத்தின் போது அவதானம் தேவை.

**கும்பம்:** யோகமான நாள். பூர்வீக சொத்துக்கள் கைக்கு வரும். உத்தியோகத்தில் கௌரவப் பதவிகள் கிடைக்கும். திருமணமாகாதோருக்கு மங்கல கருமம் கைகூடும்.

**மீனம்:** சீர்த்தியான நாள். பணம் தேவையைப் பூர்த்தி செய்யும். குடும்பத்தில் பெண்களின் நிர்வாகத் திறமையைக் கண்டு பாராட்டு கிடைக்கும்.

சந்திராட்டமநாள்: மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் கால் ஆகிய நட்சத்திரங்களில் ஜனனமானோர் அவசியம் நற்கருமங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

# மஹிந்தவை ஏமாற்றியுள்ளார் ரஷ்யாவின் முன்னாள் தூதுவர்

## தகவல் வெளியிட்டது கொழும்பு ஊடகம்

கொழும்பு, ஏப்.05

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கடந்த 9 வருடங்களாக ஏமாற்றி வந்துள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் ரஷ்யாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

இதன்மூலம் மஹிந்த ஏமாற்றப்பட்ட விடயம் தெரிய வந்துள்ளது என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

44 வருடங்களின் பின்னர் இலங்கை ஜனாதிபதி ஒருவர் ரஷ்யாவுக்கு விஜயம் மேற்கொண்டார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த காலங்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ரஷ்யாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷ கடந்த 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டு ரஷ்யாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார். அப்படி என்றால் ஜனாதிபதி மைத்திரியின் விஜயம் 44 வருடங்களின் பின்னர் இலங்கை அரச தலைவரின் முதலாவது பயணம் என்று கூறுவது எவ்வாறு பொருத்தமாகும் என்று மஹிந்த மற்றும் அவருக்கு நெருக்கமானவர்கள் ஆராய்ந்துள்ளனர். இதன்போது உதயங்கவால் மஹிந்த மிகவும் ஏமாற்றப்பட்ட விடயம் உறுதியாகியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரஷ்யாவுக்குச் சென்ற இரண்டு சுற்றுலா பயணங்களும் உத்தியோகபூர்வமற்றவை என்று தெரியவந்துள்ளது. இந்த நிலையில் அங்கு 9 வருடங்களாக தூதுவராகச் செயற்பட்ட உதயங்க, முன்னாள் ஜனாதிபதியிடம் குறித்த விஜயம் உத்தியோகபூர்வ விஜயம் என்று தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு ரஷ்யாவின் லுமும்பா பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றுக் கொள்வதற்கும், 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற உலக பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்வதற்கும் மஹிந்த ரஷ்யாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்ட சந்தர்ப்பத்தில் அப்போதைய ரஷ்யாவின் ஜனாதிபதி திமுத்ரி மெட்வெடேவ் என்பவரை மஹிந்த சந்தித்துள்ள போதிலும் அது உத்தியோக பூர்வமற்ற சந்திப்பு என்று கூறப்படுகின்றது.

இந்த முறை ரஷ்ய விஜயத்தின்போது மைத்திரியை விமான நிலையத்தில் இருந்து அரச மரியாதையுடனே அழைத்துச் சென்றனர். 40 வாகனங்களுடனான வாகன பேரணி உட்பட அரச மரியாதையுடன் மைத்திரி அழைத்துச் செல்லப்பட்ட நிலையில், அங்கு அவருக்கான அனைத்து செலவுகளும் ரஷ்யாவால் மேற்படி கொள்ளப்பட்டிருந்தன.

எனினும், மஹிந்தவின் ரஷ்ய விஜயத்தின் செலவை இலங்கை அரசே ஏற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரசன்ன ரணதுங்க எம்.பியின் வரி செலுத்தல் விவரம் கோரல்

கொழும்பு, ஏப்.05

நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க வருமான வரி செலுத்தியமைக்கான விவரங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் கோரியுள்ளனர்.

கூட்டு எதிர்க்கட்சி முக்கியஸ்தரும், கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்கவின் அலுவலகத்துக்கு நேரில் சென்ற வருமான வரி அதிகாரிகள் இது தொடர்பான எழுத்து மூல அறிவித்தலைக் கையளித்துள்ளனர்.

கடந்த சில வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க வருமான வரி செலுத்திய விவரங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் சமர்ப்பிக்குமாறு அந்த அறிவித்தலில் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள பிரசன்ன ரணதுங்க, கடந்த பல வருடங்களாக நான் உரிய முறையில் வருமான வரியைச் செலுத்தி வருகின்றேன்.

உள்நாட்டு வருமான வரி அதிகாரிகள் இவ்வாறான அறிவித்தலை எதற்காக கையளித்தார்கள் என்று தெரியாது.

எனினும், அவர்களின் கோரிக்கைப் பிரகாரம் எனது வருமான வரி செலுத்தல் விவரங்களை வருமான வரித் திணைக்களத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பேன் என தெரிவித்துள்ளார். (ஐ)

## கொடியேற்றம்

நெல்லியடி ஏப்.05

அல்வாய் கிழக்கு பெருங்கலட்டி தில்லையம்பலம் பிள்ளையார் ஆலய வருடாந்த திருவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை வேட்டைத் திருவிழாவும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெற உள்ளன.

## 2 நாள்களுக்கு மேல் காய்ச்சலா? விரைந்து செல்லுங்கள் ஆஸ்பத்திரிக்கு!

### சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் அறிவுறுத்து

கொழும்பு, ஏப்.05

இரண்டு நாள்களுக்குமேல் காய்ச்சல் நீடித்தால் உடன் அரச வைத்தியசாலைக்குச் சென்று அங்கு கடமையாற்றும் மருத்துவர் ஒருவரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளுங்கள் என்று மக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜய சுந்தர பண்டார இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

தற்போது நாடு முழுவதிலும் வைரஸ் காய்ச்சல் பரவி வருகின்றது எனவும் அது சாதாரண ஒரு காய்ச்சல் நிலையாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காய்ச்சல் ஏற்பட்டால் அரச வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுக் கொள்வதே சிறந்த வழியாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தலைவலி, இருமல், தடிமன் மற்றும் உடல் வலி போன்ற நோய் அறிகுறிகள் காணப்பட்டால் அது வைரஸ் காய்ச்சலாக இருக்கக்கூடும் என்று தெரிவித்துள்ளார்.

காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படும் மருந்து மாத்திரைகளை உட்கொள்வதுடன், போதியளவு ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## பஸ்ஸில் பயணித்த பொலிஸ்காரர் மீது தாக்குதல்!

கொழும்பு, ஏப்.05

பதுளை, எல்ல பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஹலிஎல பிரதேசத்தில் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

பணி முடிவடைந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த போது பஸ் ஒன்றில் வைத்து, பஸ் நடத்துநரும் மற்றும் இரண்டு நபர்கள் இணைந்து அவரைத் தாக்கியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுடன் தொடர்புடைய பஸ் நடத்துநர் உள்ளிட்ட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)



## பேசாலையில் இரு தினங்கள்

# சிலுவையில் இரட்சனியம் பாரம்பரிய உடக்கு பாஸ்


இந்த ஆண்டு புனித யோசவ் வாஸ் அருளாளரின் ஆண்டு. யோசவ் வாஸ் காலத்திலே கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதற்குப் புனித யோசேவ்வாஸ் கிறிஸ்துவின்பாடு, மரணம், உயிர்ப்பை பயன்படுத்தினார்.

அந்த நாள்களில் அவரின் வழிவந்த யாக்கோமோ கொன்சால்வேஸ் எழுதிய 09 வியாகுல பிரசங்கங்களைக் கொண்டு வன்னிப் பகுதியில் திருப்பாடுகளின் காட்சிகளை பயிற்றுவித்து அவற்றைக் காண்பித்தார் என்பது சரித்திரம்.

யோசவ் வாஸ் நற்செய்தி அறிவிக்கும் ஓர் ஊடகமாக இந்த உடக்கு பாஸ்கள் அசைவு இல்லாமல் காண்பிக்கப்பட்டன. பின் யாக்கோமே கொன்சால்வேஸ்ஸின் வியாகுல பிரசங்கத்துடன் காண்பிக்கப்பட்டு இதைத் தொடர்ந்து மனிதர்கள் பாஸ் நிகழ்வுகளை நடித்து காண்பித்தனர்.

அன்றைய அந்த பாரம்பரிய உடக்கு பாஸானது இன்றும் மன்னார் மறை மாவட்டத்திலுள்ள பாரம்பரிய





கிறிஸ்தவர்களாகிய பேசாலை பங்கு மக்களால் கைவிடப்படாமல் பல லட்சம் ரூபா செலவில் தொர்டர்ந்து காண்பிக்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டு புனித யோசவ் வாஸ் அடிகளாரின் நினைவாண்டாக நினைவு கூர்கின்ற இவ்வேளையில் பேசாலை பங்கு 'சிலுவையில் இரட்சனியம்' என்ற தொனிப் பொருளில் நாளையும் நாளை மறுதினமும் பாரம்பரிய உடக்கு பாஸ் நிகழ்வுகளை பேசாலையில் காண்பிக்கின்றனர்.

இந்த உடக்கு பாஸ் காண்பிப்பதற்கான அன்றைய முன்னோரால் நிர்மானிக்கப்பட்ட உடக்கு பாஸ் மண்டபம் இன்றும் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய வளாகத்தில் இருக்கின்றது.

நாடு முழுவதும் இருந்து பெருந்தொகையான மக்கள் பேசாலையில் நடைபெறும் உடக்கு பாஸை கண்டுகளிக்க வருகை தருவதால் இடவசதிகளை கவனத்தில் கொண்டு இந்த பாரம்பரிய மண்டபத்தை பயன் படுத்தாது இது போன்று பிரமாண் டமான அரங்கமைத்து மன்னார் பேசாலை பத்திமா மகா வித்தியாலய மைதானத்தில் இந்த உடக்கு பாஸ் காண்





பிக்கப்பட இருக்கின்றது.

இந்த பாஸ் மண்டப அமைப்பு ஏனைய அரங்குகளில் இருந்து முற்றாக வேறுபட்டது. காட்சிகளைப் பார்ப்பவர்கள் எப்படி பொம்மைகள் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குப் போகின்றன; வருகின்றன என்று ஆச்சரியப்படுமளவுக்கு மூன்று மேடைகள் ஒன்றின் பின் ஒன்றாக உயர்ந்து செல்லும் அமைப்பைக் கொண்டனவாக உள்ளன.

முழுமையாக நேர்த்தியாக பொருத்தமாக உடையலங்காரம் செய்யப்பட்ட உடக்குகள் பார்ப்பதற்கு உயிருள்ள பாத்திரங்கள் போலக் காட்சியளிக்கும்.

இந்த திருப்பாடுகளின் காட்சியில் பல பாத்திரங்கள் தோன்றுகின்றன. இயேசு, மரியாள், அப்போஸ்தலர் பன்னிருவர், பத்தியுள்ள ஸ்திரிகள், சீரேனே சீமோன், வெரோணிக்கா, ஆனாஸ், கைப்பாஸ், யூத குருக்கள், யூதர், பிலாத்து, ஏரோது, போர்வீரர்கள், தூதர்கள், நிக்கோதேமு, அரிமத்தியாவின் யோசேப்பு, பசாசு என்று பல பாத்திரங்கள் பங்கெடுக்கின்றன.

6 அடி உயரத்தக்குமேல் காட்சியளிக்கும் ஒவ்வோர் உடக்கும் ஆறரை, 7 அடி உயரமானது. இவ்வுடக்கு ஒவ்வொன்றுக்கும் மரத்தில் செதுக்கப்பட்ட தலை, கால் கைகள் பொருத்தப்பட்டிருக்கும். நீள் சதுர மரச் சட்டம் ஒன்றில் உடற்பகுதி போன்ற தோற்றம் மூங்கில் பிரம்பு அல்லது பனை மட்டை நார் கொண்டு உருவமைக்கப்படும் துணி உறைகளால் போர்த்தப்பட்டபின் வைக்கோலால் நிரப்பப்பட்டு கை, கால், தோள்பட்டடை முதலிய உடலுறுப்பு வடிவங்கள் உருவாக்கப்படுகின்றன.

பசாம் புத்தகம், கையேட்டுப் பிரதி, ஊதுகுழலுடன் நடத்துநர் ஒருவரும் அவருக்கு உதவியாக சிலரும் எப்போதும் ஆயத்த நிலையில் இருப்பர். ஒவ்வோர் உடக்குக்கும் சுமப்பதற்கு ஒருவரும் கைக்கம்பிகளுக்கு இருவருமாக மூவர் செயற்படுவர். பாரமான உடக்குகளுக்கு மட்டும் 6 அல்லது 8 பேர் செயற்படுவர்.

உடக்கு பாஸ் காட்டும் பாணியில் முன்னோர்கள் தொன்று தொட்டு பாரம்பரிய முறை ஒன்றைக் கடைப்பிடித்து வந்துள்ளனர். நிகழ்ச்சி நடைபெறும் அரங்குக்கு ஏறக்குறைய 100 அடிக்கு முன்னால் வாசகர் ஒருவர் உயரமான மேடைமீது எழுந்து நின்று நிகழவிருக்கும் விவிலிய சம்பவம் அல்லது புதுமை அல்லது வியாகுல பிரசங்கம் ஒன்றை அதற்குரிய இராகத்துடன் வாசிக்கத் தொடங்குவார். அந்த வாசகத்துக்கு ஏற்றதாக அங்க அசைவுகளைச் செய்து உடக்குகள் இயக்கப்படும்.

இந்த உடக்கு பாஸ் இயக்குநரான சிரேஷ்ட கலைஞரும் ஓய்வுநிலை அதிபருமான கலாபூஷணம் எஸ். ஏ.மிராண்டாவை வினவியபோது, ஒரு நூற்றாண்டு காலமாக திருப்பாடுகளின் காட்சி காண்பிப்பதில் பின்பற்றப்பட்டு வந்த பாரம்பரிய முறையில் 2000 ஆம் ஆண்டில் பெரும் மாற்றங்கள் ஏற்படலாயின.

1907ஆம்ஆண்டுதிருப்பாடுகளின் காட்சி காண்பிப்பதற்காகவே கட்டி முடிக்கப்பட்ட பாஸ் மண்டபம் இரண்டு காரணங்களால் பயன்படுத்தப்பட முடியாத நிலையை எய்தியது.

1983 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நடந்த வன்செயல் மக்கள் இடம்பெயர்வு இதன் காரணமாக ஏற்பட்ட பராமரிப்பின்மை ஆகியவற்றால் பாழடைந்ததும் சேதமடைந்ததும்- அத்துடன், இது புனரமைப்புச் செய்யப்பட்டு இந்தத் திருப்பாடுகளின் காட்சியைக் காண்பிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் பாரம்பரிய இந்ததிருப்பாடுகளின் காட்சியை காண வரக்கூடிய பல்லாயிரக்கணக்காக பக்தர்களை அடக்கக்கூடிய இடவசதியைக் கொண்டிராமையாலேயே புதிய இடத்தைத் தெரிவு செய்து பல லட்சம் ரூபா செலவில் தற்காலிக பாஸ் அரங்கு அமைத்து இந்த நிகழ்வைக் காண்பிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.- என்றார்.

(ஐ-112)

# இலங்கையில் குழந்தைத் தொழிலாளர் 99 வீதம் வரை ஒழிக்கப்பட்டுள்ளது

## அமைச்சர் ஜோன் செனவிரத்ன தகவல்

கொழும்பு, ஏப்.05

குழந்தைத் தொழிலாளர் முறை இலங்கையில் 99 வீதம் வரை ஒழிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற தொழில் ஆணையாளர்களுக்கான தெளிவூட்டல் நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ஜோன் செனவிரத்ன இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய போது அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் குழந்தைத் தொழிலாளர் முறை நூற்றுக்கு ஒரு வீதம் மட்டுமே நடைமுறையில் உள்ளது. அதிலும் ஆபத்தான தொழில்களில் ஈடுபடும் குழந்தைகள் மிகவும் அரிதான அளவிலேயே காணப்படுகின்றன.

எதிர்வரும் காலங்களில் பதினாறு வயது வரை அனைவருக்கும் கட்டாயக் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் கல்வி அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் பின்னர் குழந்தைத் தொழிலாளர் என்பதே இல்லாமல் போய்விடும்.

அத்துடன், எதிர்காலத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் தொடர்பான சட்டங்களும் கடுமையானதாக மாற்றப்படுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.- என்றார். (ஐ)

# சமாதான நீதிவான் பட்டம் பெறும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள்

கொழும்பு, ஏப்.05

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளுக்கு சமாதான நீதிவான் பதவி வழங்க நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக இன்று புதன்கிழமை நீதியமைச்சில் வைத்து ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் நூறு பேருக்கு சமாதான நீதிவான் பதவி வழங்கப்படவுள்ளது.

பொதுமக்களுக்குப் பயனுள்ள சேவைகளை ஆற்றும் வகையில் ஓய்வுபெற்ற இராணுவத்தினருக்கு இன்னொரு வாய்ப்பைக் கொடுக்கும் நோக்கில் இவ்வாறான சமாதான நீதிவான் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்று நீதி அமைச்சின் வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 140

பொன்.வேணு கிருஷ்ணா

**எல்லோரும் தோற்ற சிரியப்போர்**

உலகில் மனிதர்கள் தோன்றியது முதல் பல்வேறு காரணங்களுக்காக பல்வேறு காலகட்டங்களில் சண்டைகளும் போர்களும் ஏதாவதொரு பகுதியில் நடந்துகொண்டேதான் வந்திருக்கின்றன. ஆங்காங்கே சில பகுதிகளில் சில குழுக்களுக்குள்ளும் சில நாடுகளுக்குள்ளும் நடந்துகொண்டிருந்த சண்டைகள், 20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் உலகின் சக்திவாய்ந்த நாடுகள் இருகுழுக்களாக நின்று சண்டையிட்டுக்கொண்ட முதலிரண்டு உலகப்போர்களையும் இவ்வுலகம் பார்த்திருக்கிறது. அப்போர்களுக்குப்பின்னர் அமைக்கப்பட்ட ஐ.நா.உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளும், ஏராளமாக கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்களும், உலக அரங்கில் அமைதியைத்தானே கொண்டு வந்திருக்கவேண்டும். ஆனால் அதற்கு மாறாக, அதே அமைப்புகளையும் ஒப்பந்தங்களையும்பயன்படுத்திக்கொண்டு, மீண்டும் தனது ஆதிக்கத்தை செலுத்த வலிமைபெற்ற நாடுகள் புறப்பட்டுவிட்டன.

இரண்டாம் உலகப்போருக்கு முன்னர் உலகின் பல நாடுகளை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்து ஆதிக்கம் செலுத்திவந்த பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின், ஹாலந்து, ஜப்பான், ஜேர்மனி போன்றவை இரண்டாம் உலகப்போரில் பெரும் இழப்புகளை சந்தித்தன. சில நாடுகள் போரில் தோற்றதால் வலுவிழந்தும், சில நாடுகள்போரினால் உண்டான பாதிப்பினால் வலுவிழந்தும் போயின. அப்போரில் வெற்றிபெற்றிருந்தாலும் மிகப்பெரிய இழப்புகளை சந்தித்த நாடு சோவியத் யூனியன் தான். சோவியத் யூனியனின் எல்லைகள் சுற்றிவளைக்கப்பட்டும், எல்லைப்புற நாடுகள் ஆக்கிரமிக்கப்பட்டும், இறுதியில் தனது எல்லைக்குள்ளேயும்நுழைந்துவிட்ட ஜேர்மனியை எதிர்த்து நேருக்கு நேராக சண்டையிட வேண்டிய கட்டாயத்தில் சோவியத் யூனியன் இருந்தது. அதற்கு நேர்மாறாக அமெரிக்காவுக்கோ இப்படியான பிரச்சினைகளையும் இழப்புகளையும் எதிர்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அமெரிக்க நிலத்திற்குள் உலகப்போர்கள் நுழையவேயில்லை, அதனால் சிறியளவிலான படைகளை வைத்துக்கொண்டே பட்டும்படாமலும் தொட்டும்தொடாமலும் போர்புரிந்து கொண்டிருந்தது அமெரிக்கா. இன்னும் சொல்லப்போனால் அதிக பலம்வாய்ந்த ஜெர்மனியை போரில் நேருக்கு நேர் சந்திப்பதை அமெரிக்கா தவிர்த்தே வந்திருக்கிறது என்று கூட சொல்லலாம். உலகின் சக்திவாய்ந்த நாடுகள் அனைத்தும் உலகப்போர்களின் இழப்பிலிருந்து மீண்டுவருவது குறித்து ஆய்வுசெய்து கொண்டிருக்கும் வேளையில், அதிகம் பாதிப்படையாமலிருந்த அமெரிக்காவோ உலகப்பேரரசாகும் கனவு கண்டது.

**அமெரிக்காவின் பேராசை:**

1947இல் அமெரிக்க அயல் துறை அதிகாரியாக இருந்த அரசியல் ஆய்வாளர் கென்னன், உலகை அமெரிக்காவின் கட்டுக்குள் கொண்டுவருவதற்கான ஆவணம் ஒன்றைத் தயாரித்தார். அதனை அமெரிக்காவின் அதிகார வர்க்கத்தில் உள்ளோரிடம் சமர்ப்பித்தார். அதன்படி, ''உலகின் மக்கள் தொகையில் வெறும் 6% தான் அமெரிக்காவில் வாழ்கின்றனர். ஆனால், உலகின் சொத்துக்களில் 50% அமெரிக்காவினுடையதாக இருக்கிறது. மீதமுள்ள 50% த்தான் மற்ற அனைத்து நாடுகளும் பங்குபோட்டுக்கொண்டிருக்கின்றன. அமெரிக்காவிற்கும் மற்ற நாடுகளுக்குமான இடைவெளி மேலும் அதிகரிக்கவேண்டும். 50% சொத்துக்கள் என்கிற எண்ணிக்கை மிக அதிகமாக அதிகரிக்க வேண்டும். அப்போதுதான், உலக நாடுகள் அமெரிக்காவைச் சார்ந்தே இருக்கும். அமெரிக்காவினால் உலகைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள அதுவே உதவும்'' என்று எழுதினார். அக்காலகட்டத்தில் அமெரிக்காவின் மிகப்பெரிய அறிவுஜீவி என்றெல்லாம் கென்னன் புகழப்பட்டார். இரண்டாம் உலகப்போருக்குப்பினால், உலகை ஆக்கிரமிக்க அமெரிக்கா புறப்பட்டகதை நமக்குத்தெரியும். அதற்கு துவக்கப்புள்ளியாக இருந்தவர் அப்போதைய அமெரிக்க அதிபர் ட்ரூமன் ஆவார். ட்ரூமனின் கொள்கைகளைத்தான் அவருக்குப்பின்னால் வந்த அதிபர்கள் பின்பற்றினர். அப்படிப்பட்ட ட்ரூமனின் பல கொள்கைகளுக்கு விதையாக இருந்தது கென்னனின் ஆவணம் தான்.

அமெரிக்காவின் புகழ்பெற்ற அரசியல் ஆய்வாளரான ஃபுகயாமா, உலகம் எவ்வாறு இருக்கப்போகிறது என்று தன்னுடைய நூலான ''தி எண்ட் ஆஃப் ஹிஸ்டரி''யில் குறிப்பிட்டிருக்கிறார். அதன்படி, ''அமெரிக்காதான் இனி உலகின் ஒரே பேரரசு. அமெரிக்காதான் தொடர்ந்து உலகின் பேரரசாக இருக்கும். இதில் அமெரிக்காவோடு முரண்படுகிறவர்கள், வரலாற்றிலிருந்து தள்ளியிருக்கிறார்கள் என்று பொருள். இந்த உண்மையை ஒப்புக்கொள்ளாதவர்கள் தற்கொலை செய்துகொண்டு சாகட்டும். ஒப்புக்கொண்டு அமெரிக்காவோடு அனுசரித்து இருப்பதே உலக நாடுகளுக்குஇருக்கும் ஒரேவாய்ப்பு.'' என்றார். ஃபுகயாமாவின் இந்நூல் மிகப்பிரபலமான நூலாகியது. உலகின் முற்போக்கு இயக்கங்கள் மற்றும் ஜனநாயக எண்ணங்கொண்டோர் அனைவரின் நம்பிக்கைகளை இந்நூல் சற்றே அசைத்துப்பார்த்தது என்றே சொல்லலாம்.

அமெரிக்காவின் மற்றொரு அரசியல் ஆய்வாளரான ஹன்டிங்க்டன் என்பவர், ஃபுகயாமாவின் நூலை மறுத்து மற்றொரு ஆய்வு நூலை வெளியிட்டார். அதன்படி, ''அமெரிக்காதான் ஒரே உலகப் பேரரசு என்று முரண்பாடுகள் இல்லாத உலகமாக இருக்க வாய்ப்பே இல்லை. நிச்சயமாக முரண்பாடுகள் இருக்கும். ஆனால், இம்முறை தத்துவங்களின் அடிப்படையில் அவை இருக்காது. அதற்கு பதிலாக, பண்பாடு மற்றும் நாகரிகங்களின் அடிப்படையில்தான் முரண்பாடுகள் இருக்கும். என்று சொன்னார். உலகை ஏழு நாகரீகப் பகுதிகளாகப் பிரித்து, அவற்றுக்கு இடையில்தான் போட்டிகளும் சண்டைகளும் முரண்பாடுகளும் இருக்கும்'' என்றார். ஏழு நாகரிகங்களில் மிகவும் தீவிரமான நாகரிகமாக இஸ்லாமிய நாகரிகம் இருக்கும் என்றும் அந்நூலில் குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்தவர் பிரெசின்ஸ்கீ. அவர் ''தி கிராண்ட் செஸ்போர்ட்'' என்ற நூலை எழுதினார். அந்நூலில் மத்திய





கிழக்கு நாடுகளில் அமெரிக்கா எவ்விதமான தந்திரங்களைக் கையாண்டு உலகின் மிகப்பெரிய ஏகாதிபத்திய நாடாகத் திகழமுடியும் என்று மிகவிரிவாக எழுதியிருக்கிறார். தன்னுடைய நூலில், ''அமெரிக்கா உலகையே ஆட்சி செய்வதற்கு, யூரோ-ஆசியா என்கிற புதிய தந்திரத்தை கையாள வேண்டும். யூரோ-ஆசியாதான் உலகின் மிகப்பெரிய மக்கள் தொகையைக்கொண்ட பகுதிகளாகும். உலகின் 80% மக்கள் அங்குதான் வாழ்கின்றனர். அதிலும் ஆசியாவில் மட்டுமே 60% மக்கள் வாழ்கின்றனர். அதனால், யூரோ-ஆசியாவை யார் ஆதிக்கம் செலுத்துகிறார்களோ, அவர்கள்தான் உலகை ஆளமுடியும். அதன் பிறகு, ஆப்பிரிக்காவும் லத்தீன் அமெரிக்காவும் கட்டுப்பாட்டில் தானாக வந்துவிடும். அதனால், யூரோ-ஆசியாவில் அமெரிக்காதான் மிகப்பெரிய சக்தியாக இருக்கவேண்டும். அமெரிக்காவுக்கு நிகரான மற்றொரு போட்டியாளர் அப்பகுதிகளில் உருவாகிவிடக்கூடாது. ஐரோப்பாவைப் பொருத்தவரையில், அமெரிக்கா கவனிக்கவேண்டிய நான்கு முக்கியமான நாடுகள் பிரான்சும், ஜேர்மனியும், போலந்தும், உக்ரைனும் ஆகும். இந்நான்கு நாடுகளை அமெரிக்கா தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டால், ரஷ்யா மீண்டுமொரு சக்தியாக உருவாவதைத் தடுக்கலாம். கடந்த சில நூற்றாண்டுகளாக மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்கா நடத்திய போர்களைப் புரிந்துகொள்ள நினைப்பவர்கள், இந்நூலை அவசியம் படிக்க வேண்டும். உலக நாடுகளின் மீது வெளிப்படையாக அறிவிக்கப்பட்ட ஒரு போர்ப்பிரகடனம் இந்நூல் என்றே சொல்லலாம்.

**சோவியத் யூனியன் உடைவு:**

கிழக்கு ஜேர்மனியையும் மேற்கு ஜேர்மனியையும் இணைப்பதற்காக, அமெரிக்காவும் நேட்டோவும், ஐ.நா. சபையும் சோவியத் யூனியனின் அதிபராக இருந்த கோர்பச்சேவுடன் பேச்சுவார்த்தை நடத்தின. ஜேர்மனியின் இணைப்பிற்கு சோவியத் யூனியன் சம்மதித்தால், மத்திய ஐரோப்பாவைத் தாண்டி நேட்டோ படைகள் விரிவாக்கப்படமாட்டாது என்று அமெரிக்கா அப்பேச்சுவார்த்தையில் வாக்குறுதி கொடுத்தது. பேச்சுவார்த்தையின் மிக முக்கிய அம்சமாக இதுவே இருந்தது. ஆனால், கிழக்கு ஜேர்மனியை மேற்கு ஜேர்மனியுடன் இணைத்தபின்னரும், நேட்டோ படைகள் மத்திய ஐரோப்பாவைத் தாண்டி விரிவாக்கப்பட்டன. கார்பச்சேவுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டன. அதன் பிறகு சோவியத் யூனியன் உடைந்துபோன வரலாறு நமக்கெல்லாம் தெரியும். அதிலிருந்து பிரிந்த நாடுகளுக்கும் நேட்டோ பரவியது. போலந்தில் நேட்டோவின் ஏவுகணைத் தளம் கூட அமைக்கப்பட்டது.

சோவியத் யூனியன் சிதறுண்டதால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் ஒரு புறம் அம்மக்களை வாட்டிக்கொண்டிருந்தன. மற்றொருபுறம், உலக வரலாற்றிலேயே மிகப்பெரிய சூறையாடல்கள் ரஷ்யாவில் நிகழ்த்தப்பட்டன. சோவியத் புரட்சி காலத்திலிருந்தே மக்களின் சொத்துக்களாக இருந்தவற்றையெல்லாம் மேற்குலக கொள்ளையர்கள் நுழைந்து, பல டிரில்லியன் டொலர்கள் மதிப்பிலான சொத்துக்கள் சூறையாடப்பட்டு ரஷ்யாவிலிருந்து எடுத்துச்செல்லப்பட்டுவிட்டன. இவையெல்லாம் யெல்சினின் ஆட்சிக் காலத்தில் நடந்தன.

சோவியத் யூனியன் உடைக்கப்பட்டால் தேனாறும் பாலாறும் ஓடும் என்று நம்பவைக்கப்பட்ட மக்கள் ஏமாந்து போயினர். ஒரு கோடி குழந்தைகளுக்கு மேல் பிறந்தும், ரஷ்யாவின் பிறப்பு இறப்பு விகிதம் பூச்சியமாக மாறியது. அதாவது, சோவியத்யூனியன் உடைந்ததிலிருந்து, ரஷ்யாவில் பிறப்பவர்களை விடவும் இறப்பவர்களின் எண்ணிக்கை




அதிகமாகியது. வறுமையின் காரணமாகத்தற்கொலைசெய்துகொண்டவர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. அன்றிலிருந்து இன்றுவரை அதிலிருந்து ரஷ்யா மீள முடியாமல் தவிக்கிறது.

அதே காலகட்டத்தில் ரஷ்யாவுக்கும் செசன்யாவுக்கு இடையில் நடந்த போரிலும், மேற்குலகின் பங்களிப்பு இருந்தன. இதனால், ரஷ்யா மேலும் வலுவிழந்து போனது. எல்சின் காலத்தில் ரஷ்யாவிற்குள் இரண்டு கோடி இஸ்லாமியர்கள் வாழ்ந்துவந்தனர். அவர்களை ஒட்டுமொத்தமாக ரஷ்யாவுக்கு எதிராக மாற்றவேண்டும் என்பதில் மேற்குலகம் குறியாக இருந்தது. அதனால் செசன்யப் போரில் முஜாகிதீன் இயக்கங்கள் களமிறக்கப்பட்டன.

இவையெல்லாமுமாக சேர்ந்து, ரஷ்யா என்கிற நாடே உலகவரைபடத்தில் இல்லாமல் போகிற நிலை ஏற்பட்டது. பொருளாதார மந்தநிலை, தேசிய சொத்துக்கள் சூறையாடல், ஓய்வூதிய நிதியம் சூறையாடல், இயற்கை வளங்கள் சூறையாடல், அறிவியல் ஆய்வுகள் உள்ளிட்டவை நிறுத்தம், இராணுவம் வலுவிழந்தநிலை, அரசு ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கக்கூட இயலாத நிலை என அழிந்துவிடும் நிலைக்கு ரஷ்யா தள்ளப்பட்டிருந்தது. அயல்நாட்டுக் கொள்ளையர்களுடன் இணைந்து பல சூறையாடல்களை நிகழ்த்திய உள்ளூர் கொள்ளையர்கள் ரஷ்யாவின் புதிய அதிகார சக்திகளாக உருவெடுத்தனர். அப்படியாக உருவானவர்கள் இயல்பாகவே அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் ஆதரவு சக்திகளாக இருந்தனர். ரஷ்யாவின் ஏழ்மை நிலைக்கு உதவி புரிவதாகச் சொல்லிக்கொண்டு, அமெரிக்காவிலிருந்து கிறிஸ்தவ மிஷனரிகள் எல்லாம் வந்து குவியத் தொடங்கின.


சர்வதேச அரங்கில் ரஷ்யாவின் மதிப்பும் மரியாதையும்கூட சரிந்து விழுந்தன. ரஷ்யாவின் நண்பர்களாக இருந்தவர்கள்கூட ரஷ்யாவிடமிருந்து தள்ளியிருக்கவே விரும்பினர். ஆபிரிக்காவில், மத்திய கிழக்கில் இருந்த எண்ணற்ற ரஷ்யாவின் நட்பு நாடுகள் அனைத்தும் ரஷ்யாவை விட்டு விலகிவிட்டன. ரஷ்யாவைமீட்டுக்கொண்டுவருவதற்குச் சரியான ஆட்சியாளர்களும் இல்லை. பல நாடுகளில் இருந்த ரஷ்யாவின் தூதரகங்கள் கூட செயற்படாத நிலையில் இருந்தன. எவ்வித நோக்கமும் இல்லாத புதிய புதிய என்.ஜி.ஓக்களும் சிறுசிறு இயக்கங்களும் உருவாகின. ஆங்காங்கே அதிகாரத்தை அவர்களே எடுத்துக்கொண்டனர். ஒட்டுமொத்த ரஷ்யாவையும் கட்டுக்குள் கொண்டு வரும் அதிகாரம் யாரிடமும் இல்லாமல் போனது. சோவியத்யூனியன் உடைக்கப்பட்டு பல நாடுகள் பிரிக்கப்பட்ட பின்னரும், ரஷ்யா மிகப்பெரிய நாடாக இருக்கிறது என்று சொல்லியும், ஒவ்வொரு சிறுசிறு பகுதியும் தனிநாடு கோரும் கோரிக்கைகளை எழுப்பின. அவற்றை எழுப்பியவர்கள் அமெரிக்கா மற்றும் மேற்குலகின் ஆதரவுக் குழுக்களாக இருந்தனர் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

கேள்வி தொடரும்...



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




107

# தமிழ்த் தேசிய எழுச்சி

## யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுகள்

### சந்திரிகாவின் பிரெஞ்சு மத்தியஸ்தர்

1995 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் நாளிலிருந்து 24 ஆம் நாள்வரை, ஒரு வார காலத்துக்குள் சந்திரிகா அரசிடமிருந்து விடுதலைப் புலிகளுக்கு மூன்று கடிதங்கள் அனுப்பப்பட்டன. இதில் இரண்டு கடிதங்களை ஜனாதிபதி சந்திரிகா, தலைவர் பிரபாகரனுக்கு எழுதினார். மூன்றாவது கடிதத்தை ஜனாதிபதியின் செயலர் தமிழ்ச்செல்வனுக்கு எழுதியிருந்தார்.



சந்திரிகாவின் முதற் கடிதம் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ள வேண்டிய புனர்நிர்மாண வேலைகள் பற்றியது. மிகவும் சுருக்கமான இக்கடிதம் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட யாழ்ப்பாணம் வரவிருக்கும் தொழில்நுட்ப அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு வசதிகளை வழங்குவது சம்பந்தமானது. பெப்ரவரி மாதம் 20 ஆம் நாள் எழுதப்பட்ட சந்திரிகாவின் கடிதம் ஒரு பிரெஞ்சு மத்தியஸ்தர் பற்றியது. அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில், பிரெஞ்சு இராஜதந்திரி ஒருவரின் மத்தியஸ்துவம் ஊடாக இரகசியப் பேச்சுக்களை நடத்தும் சந்திரிகாவின் திட்டம் பற்றியது. மூன்றாவது கடிதத்தைப் பலப்பத்தபெண்டி எழுதினார். பொதுமக்களின் போக்குவரத்துக்காக பூநகரி - சங்குப்பிட்டி வீதியையும் ஆனையிறவு நெடுஞ்சாலையையும் திறந்து விடுவதற்கு அரசாங்கம் ஒரு தலைப்பட்சமாக முடிவு எடுத்துள்ளதாக அவர் தெரிவித் தார். இக்கடிதங்களை முதலில் கால வரிசையில் பிரசுரிக்கிறோம். இதனை யடுத்து கடிதங்களின் உள்ளடக்கம் பற்றிய எமது ஆய்வையும், பதிற் கடிதத்தையும் தருகிறோம்.

*16 பெப்ரவரி 1995*

*திரு. வே. பிரபாகரன்*
*தலைவர்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*
*யாழ்ப்பாணம்*

*அன்பின் திரு. பிரபாகரன் அவர்களுக்கு,*

*நாங்கள் உங்களது அமைப்புடன் கலந்துரையாடி இணக்கம் கண்ட புனரமைப்புத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது என்பதை நான் உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.*

*கீழ்க்கண்ட புனரமைப்பு வேலைகளை உடனடியாகவே ஆரம்பிக்கலாம்.*

*- யாழ்ப்பாணத்துக்கு மின்சாரம் வழங்குவது.*

*- யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான வீதிகளைத் திருத்துவது.*

*- யாழ்ப்பாணப் பொதுநூலகத்தைப் புனரமைப்பது.*

*- பொது மருத்துவமனையைத் திருத்துவது.*

*புனரமைப்பு வேலைகள் 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நாளிலிருந்து ஆரம்பிக்கலாம்.*

*எமது தொழில்நுட்ப அதிகாரிகள் 1995 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் நாள், திங்கட்கிழமையிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். அவர்களை வரவேற்று அவர்கள் பணியில் ஈடுபடுவதற்கான வசதிகளை ஒழுங்கு செய்தால் நன்றியாக இருப்பேன்.*

*கடந்த இரு வாரங்களாக அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் மத்தியில் கலந்துரையாடப்பட்ட ஏனைய விடயங்கள் பற்றி அடுத்த இரண்டு நாள்களில் நான் உங்களுக்கு எழுதுவேன்.*

*உங்களிடமிருந்து விரைவான பதில் கிடைத்தால் நன்றியாக இருக்கும்.*

*நன்றியுடன்*
*உங்கள் நேர்மையுள்ள*
*சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா*

*20 பெப்ரவரி 1995*

*திரு. வே. பிரபாகரன்*
*தலைவர்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*
*யாழ்ப்பாணம்*

*அன்பின் திரு. பிரபாகரன் அவர்களுக்கு,*

*இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் விடயங்கள் சம்பந்தமாக நாம் பேச்சுக்களைத் தொடங்கும் காலம் வந்துவிட்டது.*

*எமது பேச்சுக்கள் மிக இரகசியமாகவும் நம்பகமாகவும் இருப்பதற்காக, எமது அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் நடுவராகச் செயற்படும் வகையில், சிக்கல் இல்லாத நடுநிலையாளரான ஒருவரை நாம் பணிக்கு அமர்த்த வேண்டும் என நான் உங்களுக்கு யோசனை தெரிவிக்க விரும்புகிறேன். இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக நாம் பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொள்ள விரும்பும் கருத்துகள், யோசனைகள், விளக்கங் களை இவர் மூலம் நேரடியாக இரு தரப்பினரும் பரிமாறிக் கொள்ளலாம். இரகசியத்தைப் பேணி, நம்பகத்தன்மையோடு அரசியல் தீர்வை நோக்கி எம்மை முன் நகர்த்திச் செல்வதற்கு இவர் எமக்கு உதவுவார்.*

*இந்த நபரை எனக்கும் அரசாங்கத்திலுள்ள ஒரு சிலருக்கும் மட்டுமே தெரியும். நீங்கள் ஏற்பதாக இருந்தால் இந்த யோசனையை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த விடயமாக பிரெஞ்சு அரசாங்கத்தை நான் அணுகிய போது, மதிப்பு மிக்க பிரெஞ்சு நாட்டவர் ஒருவரை எமக்குத் தந்துதவ பிரான்ஸ் இணக்கம் தெரிவித்தது. திரு. பிரான்சுவா மிசேல் எனப்படும் இவர், எதியோப்பியா, ஹெயிட்டி ஆகிய நாடுகளில் பிரான்ஸ் நாட்டின் தூதுவராகப் பணி புரிந்தவர். இவர் இப்பொழுது ஓய்வு பெற்றிருக்கிறார். நீங்களும் இணக்கம் தெரிவித்து, இரு தரப்புமாக நாம் அவரது பாதுகாப்புக்கு உறுதி அளித்தால் அவர் இந்தப் பணியைச் செய்யத் தயாராக இருக்கிறார்.*


*இவர் எமக்கு மத்தியில் நடுவராகச் செயற்படுவாரே அன்றி, எமது கருத்துப் பரிமாற்றத்தில் பிரெஞ்சு அரசாங்கத்தை எவ்வகையிலும் ஈடுபடுத்தமாட்டார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அத்தோடு இந்தக் கருத்துப் பரிமாற்றத்தில் அவர் தனது சொந்தக் கருத்துக்களையும் திணித்து விடப் போவதில்லை. இந்த நடுவரின் சேவை தேவை இல்லையென எப்பொழுதாவது நானோ அல்லது நீங்களோ முடிவு எடுத்தால் அவர் தனது பணியை நிறுத்திக் கொள்வார்.*

*இந்த நடுவரைத் தொடர்பு கொள்ள வேண்டிய இடத்தைப் பொறுத்தவரை, நான் அவரைக் கொழும்பில் சந்தித்துக் கொள்ளுவேன். நீங்கள் விரும்பும் இடத்தில் அவரைச் சந்திக்க ஒழுங்கு செய்யலாம்.*

*திரு. மிசேல் இப்பொழுது கொழும்பில் தங்கியிருக்கிறார். மிகவும் தவிர்க்க முடியாத தனிப்பட்ட காரணங்களுக்காக பெப்ரவரி மாதம் 27 ஆம் நாளிலிருந்து மார்ச் மாதம் 14 ஆம் நாள்வரை, அவர் பிரான்ஸ் நாட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது. அவரது பணி குறித்து உங்களிடமிருந்து சாதகமான பதில் கிடைக்குமாயின், பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி அவர் கொழும்பிலிருந்து புறப்படுவதற்கு முன்னராக, அரசாங்கத்தின் யோசனைத் திட்டத்துடன் அவர் யாழ்ப்பாணம் வருவதற்குத் தயாராக உள்ளார்.*

*இவரது பணி மிகவும் முக்கியமானது என்பதாலும், இரகசியமானது என்தாலும் இவரை நீங்கள் நேரடியாகச் சந்திப்பது உகந்ததெனக் கருதுகிறேன்.*

*எனது நல்லாசிகள்*
*உங்கள் நேர்மையுள்ள*
*சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா*



இதற்கிடையில் ஜனாதிபதியின் செயலர் பலப்பத்தபெண்டி எமது அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனுக்குச் சுருக்கமான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

*24 பெப்ரவரி 1995*

*திரு. சு. ப. தமிழ்ச்செல்வன்*
*பொறுப்பாளர்*
*அரசியல்துறை*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*
*யாழ்ப்பாணம்*

*அன்பின் திரு. தமிழ்ச்செல்வன் அவர்கட்கு,*

*வடக்கில் பொதுமக்களின் இயல்பான போக்குவரத்துக்கு வசதியாக பூநகரி - சங்குப்பிட்டி வீதியையும் ஆனையிறவு வீதியையும் திறந்து விடுவதற்கு அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. இந்த முடிவுக்கு அமைய, வீதியிலிருந்து 500 மீற்றர் வரை முகாம்களின் பாதுகாப்பு முன்னணி நிலைகள் பின் நகர்த்தப்பட்டுள்ளன. இதனால் மக்களும் வாகனங்களும் சுதந்திரமான முறையில் போக்குவரத்துச் செய்ய வசதியாக இருக்கும்.*

*வடக்கில் வாழும் மக்களின் துன்பத்தைத் துடைக்கும் நோக்கில் அரசாங்கம் நடைமுறைப்படுத்திவரும் பல்வேறு நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். இராணுவத் தேவைக்கான பொருள்களைத் தவிர்ந்த, ஏனைய பொருள்கள் அனைத்தினதும் பொருளாதாரத் தடை நீக்கம், யாழ்ப்பாணத்துக்கு இலவச உணவும் மருந்துப் பொருள்களும் அனுப்பியமை, பெப்ரவரி மாதம் 20 ஆம் நாளிலிருந்து புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ள அரசு முடிவெடுத்தமை, மக்களதும் வாகனங்களதும் போக்குவரத்துக்காக இரு வீதிகள் திறந்து விடப்பட்டமை - இவை யாவும் வடக்கில் வாழும் மக்களின் வாழ் நிலையை வளப்படுத்தவும் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கவும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் திட்டங்களின் ஒரு பகுதியாகும்.*

*திறந்து விடப்பட்ட இந்த வீதிகள் ஊடாகப் போக்குவரத்தை நடத்த அனுசரணையாக எதைச் செய்ய வேண்டுமென்பது உங்களிடம்தான் உள்ளது.*

*நன்றியுடன்*
*உங்கள் நேர்மையுள்ள*
*கே. பலப்பத்தபெண்டி*
*ஜனாதிபதியின் செயலர்*

(தொடரும்...)

காலைக்கதிர்



# மாலி செல்லவுள்ள அமைதிப் படையின் பயிற்சிகள் சூரியவெவவில் முடிவடைந்தன





கொழும்பு, ஏப்.05

மாலியில் ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றுவதற்காகச் செல்லவுள்ள இலங்கை இராணுவத்தினர் காங்கேசன்துறையில் ஆரம்பித்த களப் பயிற்சி ஒத்திகை சூரியவெவவில் முடிவுக்கு வந்தது.

மாலியில் ஐ.நா. அமைதிப்படையின் வாகனத் தொடரணிக்கான பாதுகாப்பில் ஈடுபடவுள்ள இலங்கை இராணுவ அணி மார்ச் 21 ஆம் திகதி காங்கேசன்துறையில் இந்தக் களப் பயிற்சியை ஆரம்பித்தது.

9 நாள் களப் பயிற்சி சுமார் ஆயிரம் கிலோ மீற்றர் தூரப் பயணத்தின் பின்னர் நேற்று முன்தினம் மாலை அம்பாந்தோட்டை சூரியவெவவில் நிறைவடைந்தது.

வெள்ளை நிறம்பூசப்பட்ட, நீலக் கொடி பறக்க விடப்பட்ட நிலையில் - ஐ.நாவின் வாகன அணியைப் பிரதிபலிக்கும் வகையில், விநியோக வாகனங்கள், கவசவாகனங்களை உள்ளடக்கியதாக இந்த பெரிய இராணுவ வாகனத் தொடரணி இடம்பெற்றிருந்தது.

இந்த ஒன்பது நாள் களப் பயிற்சியில் இராணுவ வாகனத் தொடரணிகள் மாலியில் எதிர்கொள்ளும் பாதுகாப்பு நெருக்கடிகள் தொடர்பான பயிற்சிகளும் அளிக்கப்பட்டிருந்தன.

அடுத்த மாதம் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 200 படையினர் மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் இணைந்து கொள்வதற்காக அனுப்பப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## டெங்கு, இன்புளுவன்சா காரணமாக உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.05


இப்போது நாட்டின் பதினொரு மாவட்டங்களில் டெங்கு மற்றும் (H1N1) வகைசார்ந்த இன்புளுவன்சா காய்ச்சல், வேகமாகப் பரவி வருவதாக, சுகாதாரத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அதன் பாதிப்பால் கடந்த மூன்று மாதங்களில் 53 பேர் உயிரிழக்க நேர்ந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் குறிப்பிட்ட காய்ச்சலால் இதுவரை மொத்தம் 27 ஆயிரத்து 898 பேர் பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் 2 ஆயிரத்து 696 பேர் குறிப்பிட்ட நோயால் பாதிக்கப்பட்டனர் என்று வைத்தியத்துறையினர் தகவல் வெளியிட்டனர்.

இன்புளுவன்சாவால் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் மட்டும் பதினேழு பேர் உயிரிழக்க




நேர்ந்ததாகவும்-

ஏற்கனவே வேறு நோய்களுக்கு ஆளானோர் பெரிய அளவில் பாதிப்புக்கு ஆளாகும் நிலைமை உண்டு என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இப்போது வழக்கத்துக்கு மாறான காலநிலை உள்ளதாலும், கழிவுப் பொருள்கள் உரிய நேரத்தில் அகற்றப்படாமையாலும் டெங்கு நோய் உற்பத்தியாவதற்கு உந்து சக்தியாக இருப்பதால் அது விரைந்து பரவுவதாகவும் சுகாதார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்தவருடத்தில் 55 ஆயிரம் 150 பேர்கள் பாதிக்கப்பட்டனர் என்றும் 90 பேர் இறந்தனர் எனவும் தகவல்கள் ஏற்கனவே உண்டு. (அ)

## பொலித்தீன் பாவனை இல்லாமல் இந்த முறை மே தின நிகழ்வுகள்

இந்த நாட்டில் முதற் தடவையாக போதைப்பாவனை மற்றும் பொலித்தீன் பாவனை இல்லாமல் மேன தினத்தை கண்டி கெட்டம்பே விளையாட்டு மைதானத்தில் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.



மஹிந்த அமரவீர தெரிவிப்பு

இந்த முறை நடத்தவுள்ள மே தினம் தொடர்பாக மல்வத்து அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து விளக்கமளிக்கும் போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திசாநாயக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர மற்றும் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வரலாற்றில் முதல் தடவையாக கடந்த வருடத்தை விட அதி சிறந்த முறையில் சுற்றுச்சூழலை வழிபாடாகக் கொண்ட வேலைத் திட்டத்துக்கு இணங்க ''உங்கள் கழிவுகளை மீண்டும் எடுத்துச் செல்லுங்கள்; இல்லையேல் எமக்குத் தாருங்கள்'' என்ற தொனிப் பொருளில் மே தினத்தில் நாம் மேற்கொள்ளவுள்ளோம் என்று மகாநாயக்கர் தேரர்களிடம் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் துரித கதியில் நடத்த வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்று கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த முறை சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டம் கண்டி கட்டம்பே மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த மைதானத்தைப் பார்வையிடுவதற்காகக் கண்டி சென்றிருந்த போது ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைக் கூறியுள்ளார். (ஐ)

## வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் வீழ்ச்சி

கொழும்பு, ஏப்.05


வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 34 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளன.

இதன்படி 2015 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 677.6 மில்லியன் அமெரிக்க டொலர் நேரடி முதலீடு செய்யப்பட்டிருந்தது.

எனினும், கடந்த 2016 ஆம் ஆண்டில் இந்த தொகை 444.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் குறைவடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் அண்மைய அறிக்கையில் இந்த புள்ளி விவரத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (ஐ)




## யோகசுவாமிகளின் குருபூசை தினம் நாளை

யாழ்ப்பாணம், ஏப்.05

நாளை பங்குனி ஆயிலிய நாள் வியாழக்கிழமை ஆகும். நாளை யோகர்சுவாமிகளின் ஐம்பத்து மூன்றாவது குருபூசைநாள். கொழும்புத்துறைச் சமாதிக் கோவிலிலும் சிவதொண்டன் நிலையத்திலும் குருபூசை நிகழ்வுகள் இடம் பெறும்.

குருபூசைக்கு முந்திய மூன்று நாள்களும் சிவதொண்டன் நிலையத்து ஆச்சிரமவாழ்வு நாள்களாக அனுஷ்டிக்கப்படும். இந்த நாள்களில் நற்சிந்தனை முற்றும் ஓதி நிறைவு செய்யப்படும். குருபூசை நாளன்று முற்பகல் 9 மணி முதல் சுவாமிகளது திருமேனிக்குத் திவ்வியமான அபிஷேக ஆராதனைகள் நிகழும். பூசை முடிவில் மகேஸ்வர பூசை நடை பெறும் என்று சிவத்தொண்டன் சபையினர் அறிவித்துள்ளனர். (இ)





## கிளிநொச்சி வைத்தியசாலையின் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள்

கிளிநொச்சி, ஏப்.05

மீள்குடியேற்றத்தின் பின்னர் முதல் தடவையாக சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நடத்தப்பட்டன.

தொடர்ச்சியான வேலைப் பளுவுக்கு மத்தியிலும் தங்களது மருத்துவப் பணியை இரவு பகலாக மேற்கொண்டு வரும் மாவட்ட வைத்தியசாலையின் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகளை நடத்தியிருந்தனர்.

வைத்தியசாலைப் பணியாளர்கள் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகளாக ஒன்றிணைந்து இந்த விழாவின் அனைத்து நிகழ்வு களிலும் பங்கெடுத்தமை சிறப்பம்சமாகும்.

மரதன் ஓட்டம், கிளித்தட்டு, வலைப்பந்து, கயிறிழுத்தல், தலையணைச் சண்டை, துடுப்பாட்டம், யானைக்குக் கண்வைத்தல், சங்கீதக் கதிரை, கிட்டிப்புள்ளு, சைக்கிளோட்டம் போன்ற பாரம்பரிய விளையாட்டுகளும் இதன் போது நடைபெற்றன.

இந்த விழாவின் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆர். கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரும் கிளிநொச்சி மாவட்டப் பொதுமருத்துவமனை மற்றும் பிராந்திய சுகாதாரசேவைகள் முன்னாள் பணிப்பாளருமாகிய வைத்தியகலாநிதி சத்தியமூர்த்தியும் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கினர். (ஐ-70)

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்: தேசிய, சர்வதேச ரீதியில் அழுத்தம் தொடரும்

## சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் கிளிநொச்சியில் தெரிவிப்பு





கிளிநொச்சி, ஏப்.05

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் சர்வதேச மன்னிப்புச் சபைதேசிய மற்றும் சர்வதேச ரீதியில் தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுக்கும்.

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் சல்லி செட்டி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு ஏழு மணியளவில் கிளிநொச்சியில் 43 ஆவது நாளாக தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளைச் சந்தித்து உரையாடிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் சர்வதேச மன்னிப்புச் சபையே தொடர்ந்தும் குரல் கொடுத்து வந்திருக்கிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வலிகளை நாங்கள் உணர்கின்றோம். அவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதில் சர்வதேச மன்னிப்புச் சபை உறுதியாக இருக்கிறது.-என்றார்.

இதன்போது சர்வதேச சமூகமும், ஐ.நாவும் தங்களை ஏமாற்றிவிட்டன என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கருதுகிறார்கள் என்று ஊடகவியலாளர்களால் தெரிவிக்கப்பட்டது.இதற்குப் பதிலளிக்கையில்-

நாமும் அவர்களிடம் அந்த உணர்வைப் பார்க்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஏன் அவ்வாறு நம்புகின்றார்கள் என்றால் இதற்குத் தீர்வு காண்பதற்கு நீண்ட காலம் எடுத்தமையே. சர்வதேச மன்னிப்புச் சபை 70 இற்கு மேற்பட்ட நாடுகளை பிரதிபலிக்கிறது. நாங்கள் சர்வதேச ரீதியில் தொடர்ச்சியாக அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றோம். அத்தோடு அரசுக்கு இரண்டு வருடங்கள் கால அவகாசம் என்பது அரசைச் சுதந்திரமாக விட்டுள்ளது என்று அர்த்தமல்ல.

இந்தக் காலப் பகுதியில் அரசு சர்வதேச சமூகத்துக்குத் தான் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும், அதற்காகவும் நாங்கள் எங்களுடைய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.- என்றார்.

(ஐ-70)

## நாளை மின் தடை

யாழ்ப்பாணம்,ஏப்.04

நாளை வியாழக்கிழமை வவுனியா பிரதேசத்தில் சில இடங்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி வவுனியா பிரதேசத்தில் ஓமந்தை நகரத்திலிருந்து புளியங்குளம் வரை. ஓமந்தைவீட்டுத்திட்டம், ICTகல்லூரி, யூனியன் அலையன்ஸ் லிமிட்டெட் ஏ.எம்.பி.ஓமந்தை, ஓமந்தை மீன்பிடி வலைத்தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் மின் தடை ஏற்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

## விரைவில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை

### எல்லை நிர்ணயக் குழு முன்னாள் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, ஏப்.05

உள்ளூராட்சி சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்று எல்லை நிர்ணயக் குழுவின் முன்னாள் தலைவர் அசோக்க பீரிஸ் தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

உள்ளூராட்சி சபை சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாக அரசு கூறியது. இதுவரை அவற்றை நிவர்த்தி செய்ய அரசு எவ்வித முயற்சிகளையும் எடுக்கவில்லை.

எல்லை நிர்ணய அறிக்கையில் திருத்தங்களை மேற்கொள்ளாது அரசு ஒருபோதும் தேர்தலுக்குச் செல்லாது. அரசின் திட்டம் மக்களுக்குச் சேவை செய்வதா? அல்லது தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதா?.-என்றார்.

எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி துறைசார் அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, எல்லை நிர்ணயத்தால் சிறுபான்மை இன மக்களின் பிரதிநிதித்துவம் பாதிப்படையும் என்று சிறுபான்மைக் கட்சிகள் போர்க்கொடி உயர்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## வியாபார முகாமைத்துவமாணி பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஏப்.05

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தால் நடத்தப்படுகின்ற வியாபார முகாமைத்துவமாணி பட்டப் படிப்பிற்கான பரீட்சைகளை ஒவ்வொரு சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் மேற்படி நிலையத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில் எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை முதல் அடுத்த மாதம் 7ஆம் திகதி ஞாயிறு வரை இந்தப் பரீட்சைகள் மேற்குறிப்பிட்ட நாள்களில் இடம்பெறும்.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் புதன்கிழமை தொடக்கம் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையப்பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமலதாசன் அறிவித்துள்ளார்.

(இ)

# இலங்கையின் கடனை அடைக்கவே முதலீட்டுக்கு நாடுகளை அழைக்கிறோம்

## பிரதமர் ரணில் சுட்டிக்காட்டு





கொழும்பு, ஏப்.05

இலங்கை கடனில் மூழ்கியுள்ளது. 2026ஆம் ஆண்டு வரை கடனை மீள செலுத்தும் காலம் உள்ளது. நல்லாட்சி அரசு இந்தக் கடனைச் செலுத்தும், அதன் அடிப்படையிலேயே சர்வதேச நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இலங்கையில் முதலீட்டை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்து வருகின்றோம்.

-இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கிரிபத்கொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் நாட்டைக்கடனில் இருந்து மீட்பதுடன், அபிவிருத்தியையும் செய்ய அரசு திட்டங்களை வகுத்துள்ளது.

3 ஆயிரத்து 600 கோடி அமெரிக்க டொலர்களை இலங்கை கடனாகச் செலுத்த வேண்டியுள்ளது.

முன்னாள் அரசின் வினைத்திறனற்ற ஆட்சியில் பெற்றுக்கொண்ட கடன்களே இவ்வாறு பெருக்கமடைந்துள்ளன.

2026 ஆம் ஆண்டுக்குள் இலங்கை பெற்றுக்கொண்டுள்ள கடனைச் செலுத்த வேண்டும்.

கடனை மீளச் செலுத்தும் முறைமைகள் தொடர்பில் வாரந்தோறும் அரசு பேச்சுக்களை நடத்துகின்றது.

கடனைச் செலுத்தும் காலப் பகுதியில் நாட்டில் அபிவிருத்தியையும் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இந்த வருடம் தொடக்கம் அப்பாந்தோட்டைத் துறைமுகத்துக்காக முன்னாள் அரசு பெற்றுக் கொண்டுள்ள கடனின் வட்டித்தொகையும் அதிகரித்துள்ளது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரைவில் கண்ணீர் சிந்த நேரிடும்.

இரண்டு வெசாக் பௌர்ணமி தினங்களில் இந்த நல்லாட்சி அரசு கவிழ்க்கப்படும் என்று மஹிந்த சூளுரைத்துள்ளார்.

அவ்வாறு சூளுரைத்த மஹிந்த விரைவில் கண்ணீர் சிந்த நேரிடும்.

மஹிந்த ராஜபக்ஷ காலத்துக்குக் காலம் நல்லாட்சி அரசைக் கவிழ்ப்பது பற்றி கனவு காண்கின்றார். எனினும், அது யதார்த்தமில்லை.

நாட்டின் அபிவிருத்தியை வலுப்படுத்தும் முனைப்புக்களில் அரசு ஈடுபட்டுள்ளது.- என்றார்.

(ஐ)

# சசிகலாவை தும்கூர் சிறைக்கு மாற்றக் கோரிய மனு தள்ளுபடி!

**டிராபிக் ராமசாமி பெயர் குறித்து கேள்வி**

கர்நாடக உயர் நீதி மன்றத்தில் சென்னை யைச் சேர்ந்த சமூக ஆர் வலர் டிராபிக் ராமசாமி என்பவர், சசிகலாவைத் தும்கூர் மகளிர் சிறைக்கு மாற்ற வேண்டும் எனக் கோரி மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு தலைமை நீதிபதி முகர்ஜி மற்றும் நீதிபதி தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலை யில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விசார ணைக்கு வந்தது.

இதன்போது, நீதிபதி முகர்ஜி தெரிவிக்கை யில்:-

டிராபிக் ராமசாமியின் உண்மையான பெயர் என்ன? எதற்காக இந்த அடைமொழியைப் பயன் படுத்துகிறார். அரச ஆவ ணங்களில் என்ன பெயர் இருக்கிறதோ? அதைத்தான் பயன்படுத்த வேண்டும்.

மேலும், சசிகலா மீதான முறைப்பாட்டில் எந்த விதிமுறை மீறலும் நடைபெறவில்லை. எனவே, இந்த மனு தள் ளுபடி செய்யப்படு கிறது.- என உத்தரவிட் டார். (ச)

# வைகோ விடுதலை செய்யப்பட வேண்டும்!

சென்னை,ஏப்.05

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவை விடு தலை செய்ய வேண்டும் என்று தமிழர் தேசிய முன் னணி தலைவர் பழ.நெடுமாறன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகளை ஆதரித்து 2009 ஆம் ஆண்டில் பேசினார் என்பதற்காக 8 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது வைகோ கைது செய்யப்பட்டிருக்கிறார். அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.- என்றுள்ளது. (ச)

**எவ்வித பாகுபாடும் இல்லாமல்**

# தமிழக விவசாயிகளின் கடனை இரத்துச் செய்யுமாறு உத்தரவு

## நேற்று உயர் நீதிமன்றம் பிறப்பிப்பு



சென்னை, ஏப்.05

கூட்டுறவு வங்கிக ளில் தமிழக விவசாயிகள் பெற்ற கடனை சிறு, குறு, பெரும் விவசாயி கள் என எவ்வித பாகு பாடும் இல்லாமல் ரத்து செய்யுமாறு தமிழக அர சுக்கு உயர் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க் கிழமை உத்தரவிட்டுள் ளது.

கடந்த வருடம் ஜூன் மாதம் 28 ஆம் திகதி கூட்டுறவுத்துறை ஓர் உத்தரவைப் பிறப்பித் தது. அதில் சிறு மற்றும் குறு விவசாயிகளின் கடனை ரத்துச் செய்வ தாக அறிவித்தது.

இந்நிலையில், தமிழ கத்தில் பருவமழை பொய்த்து கடும் வறட்சி ஏற்பட்டதை அடுத்து, 6 மாதங்களுக்கு முன் னதாகத் தென்னிந்திய நதிகள் இணைப்பு சங் கத் தலைவர் அய்யாக் கண்ணு சென்னை உயர் நீதிமன்றம் மதுரைக் கிளையில் பொதுநல மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

அந்த மனுவில், "தமி ழகத்தில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் அனைத்து விவசாயிக ளும் கடுமையாகப் பாதிக் கப்பட்டுள்ளனர். இந் நிலையில், 2.5 ஏக்கர் அளவிலான நிலம் வைத் திருக்கும் குறு விவசா யிகளுக்கும், 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருக் கும் சிறு விவசாயிகளுக் கும் மட்டும் அரசு கடன் தள்ளுபடி செய்து உத்தர விட்டிருப்பது ஏற்புடைய தல்ல. எவ்வித பாகுபா டும் இல்லாமல் அனைத்து விவசாயிகளுக்கும் கூட் டுறவுக் கடன் ரத்து செய் யப்பட வேண்டும்" எனக் குறிப்பிட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி கள் நாகமுத்து, முரளித ரன் ஆகியோர் முன்னி லையில் நடைபெற்று வந் தது. மனுவை விசாரித்து வந்த நீதிபதி நாகமுத்து சென்னை உயர் நீதிமன் றத்திற்கு பணியிட மாறு தல் பெற்றுள்ளதால் இந்த வழக்கின் தீர்ப்பை ஒத்தி வைத்திருந்தார். இந் நிலையில், நேற்று செவ் வாய்க்கிழமை நீதிபதி நாகமுத்து இந்த வழக்கை மீண்டும் விசாரணை செய்தார். இதன் போதே மேற்படி உத்தரவு பிறப் பிக்கப்பட்டது.

**டில்லியில் கொண்டாட்டம்**

இதற்கிடையில், விவ சாய கடன்களைத் தள்ளு படி செய்ய வேண்டும், காவிரி மேலாண்மை வாரி யம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக் கைகளை வலியுறுத்தி டில்லியில் அய்யாக் கண்ணு தலைமையில் போராடி வரும் விவசா யிகள் இந்தத் தீர்ப்பு தங் களுக்கு மகிழ்ச்சியளிப்ப தாகத் தெரிவித்து கொண் டாட்டத்தில் ஈடுபட்டனர். இருப்பினும், இப்போதைக் குத்தங்கள் போராட்டத் தைக் கைவிடப் போவ தில்லை என அவர்கள் அறிவித்துள்ளனர். (ச)

# பசுவைப் பாதுகாக்கும் பா.ஜ.க. அரசு விவசாயிகளைக் காப்பதற்கு தவறியது ஏன்?



**கேள்வி எழுப்புகிறார் சஞ்சய் ராவத் எம்.பி.**

டில்லி,ஏப்.05

பசுவதைக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக் கும் பா.ஜ.க. அரசு, பசுவை வளர்க்கும் விவ சாயிகளைப் பாதுகாக்க எந்தவிதமான நடவடிக் கையையும் ஏன் எடுக்க வில்லை?

-இவ்வாறு சிவசேனை எம்.பி.சஞ்சய் ராவத் கேள்வி எழுப்பியுள்ளார்.

டில்லியில் செய்தியா ளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:-

பசுக்களைக் கொன் றால் ஆயுள் தண்டனை விதிக்கும் சட்டத்திருத் தத்தை குஜராத் அரசு அண்மையில் நிறை வேற்றியது. இது ஒருபுற மிருக்க, பசுக்களைக் கொல்பவர் களைத் தூக் கிலிடுவோம் என்று சத் தீஸ்கர் மாநில முதல்வர் ரமண் சிங் தெரிவித் திருந்தார்.

பசுக்களைப் போலவே விவசாயிகளுக்கும் இந்த மண்ணில் வாழ்வதற்கு அனைத்து உரிமைகளும் உள்ளன. பல்வேறு கோரிக்கைகளை வலியு றுத்தி அவர்கள் போராட் டத்தில் ஈடுபடுகிறார்கள் என்றால், அவற்றுக்குத் தீர்வு காண வேண்டிய கடமை சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்குத் தான் இருக்கிறது.

வேளாண் மக்களின் வேதனையைத் தீர்ப்ப தற்குத் தேவையான உறு தியான நடவடிக்கையை ஆட்சியாளர்கள் எடுக்க வேண்டும். இல்லை யென்றால், விவசாயிக ளின் தற்கொலைகளுக் குச் சம்பந்தப்பட்ட மாநில அரசே பொறுப் பேற்க வேண்டியிருக் கும்.-என்றார். (ச)

# ரஷ்யாவுடன் வர்த்தகத்தில் ஈடுபடத் திட்டம்!

ரஷ்யாவுடன் எதிர் வரும் 2025 ஆம் ஆண் டளவில் 30 பில்லியன் டொலர் அளவிலான வர்த் தக நடவடிக்கைகளை மேற்கொள்ள இரு தரப்பி லும் திட்டமிடப்பட்டுள் ளது என மத்திய வெளியு றவுத்துறை செயலாளர் ஜெய்சங்கர் தெரிவித்துள் ளார்.

இந்தியா மற்றும் ரஷ்ய உயர் அதிகாரிகளின் வட்ட மேசை செய்தியாளர்கள் சந்திப்பு தலைநகர் புது டில்லியில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது. இதில் உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இந்தியாவின் நீண்ட கால நட்பு நாடாக ரஷ்யா இருந்து வருகின்றது. இந்நிலையில், இரு நாடு களுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மேலும் வலுப்பெற வேண் டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

**அதோ அந்தப் பறவை போல...!**

# கடலில் கங்கை அமரன் பாட்டுடன் பிரசாரம்!



காசிமேடு, ஏப்.05

சென்னை ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் போட்டியிடும், பா.ஜ.க. வேட்பாளர் கங்கை அம ரன் மற்றும் தமிழிசை சவுந்தரராஜன் ஆகியோர் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்க ளிடம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

காசிமேடு துறைமுகத் தில் இருந்து மீன்பிடி படகு மூலம் அவர்கள் கடலுக்குள் சென்றனர். பின்னர், அங்கு மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களிடம், 'அதோ அந்தப் பறவை போல...' என்ற பாடலைப் பாடி, கங்கை அமரன் வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார்.

அங்கு தமிழிசை சவுந் தரராஜன் கருத்துத் தெரி விக்கையில்:-

மத்திய பா.ஜ.க. அரசு, மீனவர்களின் நலனில் அக்கறை காட்டி வருகி றது. இலங்கை சிறையில் தூக்குத்தண்டனை கைதி களாக இருந்த, ஐந்து தமிழக மீனவர்களை காப் பாற்றியது. மீனவர்களுக் கான பல திட்டங்களுக் காக, ஆயிரத்து 500 கோடி ரூபாவை ஒதுக்கி உள் ளது. இந்தத் தொகுதியில், கங்கை அமரன் வெற்றி பெற்றால், பிரதமர் மோடி யின் நேரடி பார்வையில் திட்டங்கள் முழுமையாக செயற்படுத்தப்படும். -என்றார். (ச)

## கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில்

# கச்சதீவை முற்றுகையிடுவதற்கு தமிழக மீனவர் தீர்மானம்!

கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாது போனால், எதிர்வரும் 25 ஆம் திகதி கச்சதீவை முற்று கையிட்டு போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட் டுள்ளது எனத் தமிழக மீனவர் சங்கத் தலைவர் கள் அறிவித்துள்ளனர்.

ராமேஸ்வர மீனவர் சங் கத்தலைவர்கள் மீனவர்க ளுடன் நேற்றுச் செவ் வாய்க்கிழமை ஆலோச னைக் கூட்டம் நடத்தி னர். இதன் போதே மேற் படி தீர்மானம் எடுக்கப்பட் டது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர் பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வரு மாறு:-

நாளை வியாழக்கி ழமை இந்திய வெளியுற வுத்துறை அமைச்சகம் சார்பில் அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு இலங்கை அதிகாரிகளுடன் தமிழக மீனவர்களின் பிரச்சினை கள் தொடர்பில் பேச்சு நடத்தவுள்ளனர்.

இலங்கையில் சிறைப் பிடிக்கப்பட்டுள்ள மீன வர்கள் மற்றும் அவர்களது படகுகளை விடுவிக்க வேண்டும், கடந்த 1974 ஆம் ஆண்டு கச்சதீவு ஒப்பந்தத்தின் படி கச்ச தீவில் வலைகளை உலர்த்தவும், ஓய்வெடுக் கவும், பாரம்பரிய மீன்பிடி உரிமையையும் வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை இந்தச் சந்திப்பில் வலியுறுத்து மாறும் இந்திய வெளியு றவுத்துறைக்குத் தெரி யப்படுத்தியுள்ளோம்.

இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட் சத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி தமிழகத்தில் உள்ள அனைத்து மீனவர் களையும் ஒன்று திரட்டி கச்சதீவை முற்றுகை யிட்டு போராட்டம் நடத் தத் தீர்மானிக்கப்பட்டுள் ள.-என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-ச)

# சிரிய விமானத் தாக்குதலில் 28 பொதுமக்கள் பலி!





டமஸ்கஸ், ஏப். 05

சிரியாவில் கிளர்ச்சியாளர்களை குறிவைத்து சிரிய போர் விமானங்கள் நடத்திய வான்வெளித்தாக்குதலில் 28 பொதுமக்கள் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஜிஹாதி குழுவினர் நாட்டின் பல பகுதிகளை கையகப்படுத்தி, தங்களது ஆதிக்கத்தின்கீழ் வைத்து நிர்வகித்து வருகின்றனர்.

இதுதவிர, ஐ.எஸ். தீவிரவாதிகளும் சில பகுதிகளை கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர்.

இந்தக் குழுக்களையும் வேட்டையாட அமெரிக்க விமானப் படையின் துணையுடன் அந்நாட்டு முப்படைகளும் தீவிரமாக போரிட்டு வருகின்றன.

இந்தநிலையில், அரசுக்கு எதிராகச் செயற்படும் கிளர்ச்சியாளர்கள் மற்றும் தீவிரவாதிகளை குறிவைத்து சிரிய விமானப்படையினரின் போர் விமானங்கள் டோவுமா, சாப்குவா ஆகிய பகுதிகளில் வான்வெளித்தாக்குதலை நடத்தினர்.

ஆனால், இந்தத்தாக்குதலில் சுமார் 28 அப்பாவி பொதுமக்கள் பலியாகினர் என்று மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. இதில், குழந்தைகள் மற்றும் பெண்களும் அடங்குகின்றனர் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

சிரியாவில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் நடந்து வரும் உள்நாட்டு போர் காரணமாக இது வரை சுமார் 3 லட்சத்து 20 ஆயிரம் பொதுமக்கள் பலியாகியுள்ளனர், 10 லட்சத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் சொந்த இடத்தைவிட்டு வெளியேறியுள்ளனர் என்றும் மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

# அமெரிக்கர்களின் இணையத்தள இரகசியங்களை அம்பலப்படுத்தும் சட்டத்தில் கையொப்பமிட்டார் ட்ரம்ப்!



வொஷிங்டன், ஏப். 05

அமெரிக்க மக்களின் இணையதள நடமாட்டம் தொடர்பான இரகசியங்களை தேவைக்கேற்ப தனிநபர்களுக்கு அம்பலப்படுத்தும் புதிய சட்டத்தில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையொப்பமிட்டுள்ளார்.

இதனால், இணையவாசிகள் கலக்கத்திலும், பீதியிலும் ஆழ்ந்துள்ளனர்.

உலக அளவில் அமெரிக்காவில் வாழும் மக்கள் இணையத்தள பயன்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் அளித்துவரும் நிலையில், சிலரைப் பற்றிய இணைய பயன்பாடு தொடர்பான தகவல்களை கள்ளத்தனமாக ஒற்றறிந்து, அவற்றை அந்நபருக்கு எதிராக செயற்படும் நபர்களுக்கு விலைக்கு விற்கும் கும்பலும் பெருகி வருகிறது.

இந்த திருட்டை தடுக்கும் வகையில் கடந்த ஆண்டில் பராக் ஒபாமா ஆட்சிக் காலத்தின்போது இணையத்தள பயன்பாட்டாளர்கள் பாதுகாப்பு சட்டம் கொண்டு வரப்பட்டது.

அந்நாட்டிலுள்ள பல்வேறு புலனாய்வு முகாமைகளின் ஒருங்கிணைந்த அறிவுறுத்தலின் பேரில்தான் ஒரு தனிநபர் தொடர்பான இணையத்தள பயன்பாட்டு ரகசியங்களைப் பெறமுடியும் என்ற சட்ட பாதுகாப்பு இதன்மூலம் கிடைத்தது.

எனினும், இணையத்தள பயன்பாட்டாளர்களுக்கு கிடைத்த பாதுகாப்பு கேடயமாக கருதப்பட்ட இந்தச் சட்டம் இன்னும் நடை முறைக்கு வரவில்லை.

இந்நிலையில், இந்தச் சட்டத்தை செல்லாக்காசாக மாற்றும் புதிய சட்டத்தை கொண்டு வர ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான புதிய அரசு தீர்மானித்தது.

தேவைகளுக்கு ஏற்ப ஜனாதிபதியின் ஒற்றை கையொப்பத்தை வைத்தே ஒருவரின் இணையத்தள பயன்பாடு தொடர்பான ரகசியங்களை எளிதில் அறிந்து கொள்ள வகை செய்யும் இந்த புதிய சட்டப் பிரேரணை அமெரிக்க நாடாளுமன்ற மேலவையில் கடந்தவாரம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஆதரவாக 50 எம்.பிக்களும், எதிர்த்து 48 எம்.பிக்களும் வாக்களித்தனர்.

இந்தநிலையில், இதன்மீது நாடாளுமன்ற பொதுச்சபையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பில் அமுல்படுத்துவதற்கு ஆதரவாக 215 எம்.பிக்களும், எதிர்த்து 205 எம்.பிக்களும் வாக்களித்துள்ளனர்.

இந்தச் சட்டத்துக்கு ஒப்புதல் அளித்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று கையொப்பமிட்டார் என்று வெள்ளை மாளிகை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் இந்தச் சட்டத்தால் அமெரிக்காவில் வாழும் மக்களின் இணையத்தள பயன்பாட்டாளர்கள் தொடர்பான ரகசியங்கள் இனி அவர்களின் கவனத்துக்கு வராமலேயே ஜனாதிபதியின் ஒற்றை கையொப்பத்தால் இனி பிறருக்கு அம்பலமாகிவிடும்.

இணையத்தளச் சேவை வழங்கும் எந்த நிறுவனங்கள் வேண்டுமானாலும் பணத்துக்காக ஆசைப்பட்டு யாருடைய ரகசியத்தையும், எவருக்கு வேண்டுமானாலும் இனி விலைக்கு விற்கலாம் என்ற சூழல் இந்த புதிய சட்டத்தால் உருவாகலாம் என்ற அச்ச உணர்வும், பீதியும் தற்போது அங்குள்ள மக்களின் மனதில் எழுந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# கொலம்பியா நிலச்சரிவில் பலியானோர் எண்ணிக்கை 250 ஐ தாண்டியது!

## 100 பேருக்கும் அதிகமானோர் மாயம்





போகோட்டா, ஏப்.05

கொலாம்பியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் பலியானவர்களின் எண்ணிக்கை 250 ஆக உயர்ந்துள்ளது.

மேலும், 100 இற்கும் அதிகமானோர் காணாமற் போயுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென் அமெரிக்கா நாடான கொலம்பியாவில் உள்ள புட்டுமயோ மாகாணத்தில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் கடும்மழை காரணமாக அப்பகுதியில் உள்ள நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றது.

இதனால், நதிகளின் ஓரம் உள்ள பொதுமக்கள் வசிப்பிடங்களில் நேற்றுமுன்தினம் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் சிக்கி சுமார் 93 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என்று முதல் கட்ட தகவல்கள் வெளியாகின.

மேலும், பலர் மண் சரிவில் சிக்கி புதையுண்டு போயுள்ளனர் என்றும், அவர்களை மீட்கும் பணியில் ராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் 250 இற்கும் மேற்பட்ட சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. மேலும், 100 இற்கும் அதிகமானோர் பற்றிய தகவல்கள் இன்னமும் கிடைக்கவில்லை.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் இம்மாகாணத்தில் மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி சுமார் 100 பேர் பலியாகி வருகின்றனர் என அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# சீனாவில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 5 பேர் பலி!



பெய்ஜிங், ஏப்.05

சீனாவின் அன்ஹுய் மாகாணத்தில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 5 பேர் உடல்கருகி உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் கிழக்கு பகுதியில் உள்ள அன்ஹுய் மாகாணத்தில் வான்ஹுவா எண்ணெய் நிறுவனத்துக்குச் சொந்தமான சுத்திகரிப்பு ஆலை உள்ளது.

நேற்றுமுன்தினம் ஆலையின் எண்ணெய் சேமிப்பு கிடங்கில் உள்ள தொட்டியில் திடீரென எதிர்பாராத விதமாக வெடி விபத்து ஏற்பட்டது.

அப்போது, அங்கு பணியில் இருந்த தொழிலாளர்கள் பலர் தீயில் சிக்கிக் கொண்டனர். விபத்து குறித்து தகவலறிந்து விரைந்து வந்த மீட்புப் படையினர் உள்ளே சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்தக் கோர விபத்தில் 5 பணியாளர்கள் உடல் கருகி உயிரிழந்துள்ளனர். அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன.

மேலும், காயமடைந்த 3 பேரில் இரண்டு பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இருப்பினும் இந்த விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை தெரியவில்லை.

# ஆசிய கிரிக்கெட் சபையின் வளர்ந்துவரும் அணிகளின் சம்பியனாக முடிசூடியது இலங்கை அணி!

சிட்டகொங், ஏப். 05

பங்களாதேஷின் சிட்டகொங், சஹூர் அகமத் சௌத்ரி மைதானத்தில் வந்த இளையோர் ஆசியக் கிண்ண சம்பியன் ஷிப் போட்டியில் இலங்கை அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

இத்தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்று இறுதி ஆட்டத்தில் 23 வயதுக்கு உட்பட்ட பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான விறுவிறுப்பான இறுதிப் போட்டியில், ஷெஹான் ஜயசூரியவின் அதிரடிப் பந்து வீச்சின் மூலம் இலங்கை அணி 26.1 ஓவர்கள் மீத மிருக்க 5 விக்கெட்டுகளால் பாகிஸ்தான் அணியை இலகுவாக வெற்றிகொண்டது.



அரையிறுதிப் போட்டியில் ஆப்கான் இளையோர் அணியைத் துவம்சம் செய்து 18.2 ஓவர்கள் மீதமிருக்க 123 ஓட்டங்களால் சாதனை வெற்றியை பதிவு செய்த நிலையில், துடுப்பாட்டத்துக்கு உகந்த சிட்டகொங் மைதானத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று பாகிஸ்தான் இளையோர் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

அந்த வகையில் ஓட்டங்களைக் குவிக்கும் எண்ணத்தில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி முதலாவது விக்கெட்டை 12 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது அசித்த பெர்னாண்டோவின் பந்து வீச்சில் பறி கொடுத்தது. அதிரடியாக ஓட்டங்களை குவிக்க முயசித்த வேளையில் 2 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 10 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் ஹுசைன் தலாத் ஆட்டமிழந்தார்.

அதனையடுத்துக் களமிறங்கிய ஹரிஸ் சொஹைல் வந்த வேகத்திலேயே 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து செல்லப் பாகிஸ்தான் அணி வெறும் 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து இக்கட்டான சூழ்நிலையில் இருந்தது.

அதனைத் தொடர்ந்து களமிறங்கிய அணித் தலைவர் முஹம்மத் ரிஸ்வான் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்களைப் பெற முயன்றார். அதேநேரம் சூழ்நிலையை சரியாக கணிப்பீடு செய்த இலங்கை இளையோர் அணித் தலைவர் அஞ்சேலோ பெரேரா பாகிஸ்தான் அணியின் சூழ்நிலைக்குத் தகுந்த களத்தடுப்பை ஒழுங்கு செய்தார்.

சிறப்பான களத்தடுப்பின் மத்தியில் பாகிஸ்தான் அணி ஓட்டங்களை விரைவாகக் குவிக்கத் தடுமாறியது.

முஹம்மத் ரிஸ்வான் ஓட்டங்களை வேகமாக பெற முயசித்த போது வலதுகை ஒப் பிரேக் பந்து வீசும் ஷெஹான் ஜயசூரியவின் பந்து வீச்சில் நேரடியாக போல்ட் முறையில் 26 ஓட்டங்களுக்குத் துரதிஷ்டவசமாக ஆட்டமிழந்து சென்றார்.

அவரைத் தொடர்ந்து களமிறங்கிய ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் ஒற்றை இலக்கு ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றமை மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய உஸாம மிர் 26 ஓட்டங்களுக்கு வணிது ஹசரங்கவின் பந்து வீச்சில் நேரடியாக போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

சீரான இடைவெளிகளில் விக்கெட்டுகளை இழந்த பாகிஸ்தான் இளையோர் அணி 42.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 133 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. ஓட்டங்களை கட்டுப்படுத்திய ஷெஹான் ஜயசூரிய 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

134 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு இலங்கை இளையோர் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய சதீர சமரவிக்ரம மற்றும் அவிஷ்க பெர்னாண்டோ முதல் விக்கெட்டுக்காக 23 ஓட்டங்களை பகிர்ந்து கொண்ட நிலையில், முதல் விக்கெட்டாக அவிஷ்க பெர்னாண்டோ 17 ஓட்டங்களுக்கு சமீன் குல்லின் பந்து வீச்சில் இம்ரான் பட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அதனையடுத்து களமிறங்கிய ஷெஹான் ஜயசூரிய உள்ளிட்ட மூன்று வீரர்கள் ஒற்றை இலக்கத்துடன் ஆட்டமிழக்க சற்று தடுமாறியது இலங்கை இளையோர் அணி.

எனினும், சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய சதீர சமரவிக்ரம 45 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றார்.

சற்று நெருக்கடியான சூழ்நிலையில், களமிறங்கிய கித்ருவான் விதனகே மற்றும் வணிது ஹசரங்க ஆகியோர் இணைந்து பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 36 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

இறுதியில் இலங்கை அணி 23.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக ஷெஹான் ஜயசூரியவும் தொடரின் ஆட்ட நாயகனாக சரித் அசலங்கவும் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

# 10 ஆவது ஐ.பி.எல். கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?

டில்லி, ஏப். 05

இந்தியாவில் ஆண்டுதோறும் நடக்கும் ஐ.பி.எல். போட்டிக்கு இந்தியாவில் மட்டுமல்ல உலகம் முழுவதிலும் ரசிகர்கள் உள்ளன.



அனைத்து அணி வீரர்களும் இந்த தொடரில் கலந்து கொள்கின்றமையால் ஆட் டத்தில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது.

அந்த வகையில் இந்த ஆண்டிற்கான ஐ.பி.எல். போட்டி இன்று தொடங்கவுள்ளது.

இதற்கான அணி வீரர்கள் அனைவரும் அவர்கள் அணியுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த ஆண்டு நடக்கும் ஐ.பி.எல். போட்டியில் நட்சத்திர வீரர் கோஹ்லி, அஸ்வின் மற்றும் முக்கிய வீரர்கள் சிலர் காயங்கள் மற்றும் சொந்த காரணங்களுக்காகத் தொடரிலிருந்து விலகியுள்ளனர்.

இருப்பினும் ஐ.பி.எல்லுக்கான எதிர்பார்ப்பு குறையவில்லை. அந்த வகையில் இந்தாண்டு எந்த அணி ஐ.பி.எல். தொடரைக் கைப் பற்றும் என்று பிரபல ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜோதிடர்களின் கணிப்பாக வெளியிடப்பட்டுள்ள தகவலில், இந்தாண்டு நடக்கும் 10 ஆவது ஐ.பி.எல். தொடரை ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு, குஜராத் லயன்ஸ் மற்றும் சன்ரைஸர்ஸ் ஹைதராபாத் போன்ற அணிகள் கைப்பற்றுவதற்கு வாய்ப்பு உள்ளது என்று கூறியுள்ளது.

மேலும் இந்தாண்டு டில்லி அணி மற்ற அணிகளுக்கு கடும் சவால் அளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கணிப்பு ஒவ்வோர் அணியின் தலைவர்களின் ஜாதக நிலையை வைத்துக் கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படி திடீரென்று அணியில் தலைவர்கள் மாறினால், இந்தக் கணிப்புகளும் மாறும் என்றும் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இந்த முறை கொல்கத்தா, மும்பை இந்தியன்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் மற்றும் ரைசிங் புனே வாரியர்ஸ் போன்ற அணிகள் இந்தாண்டு நடக்கும் 10ஆவது ஐபிஎல் கிண்ணத்தை கைப்பற்றுதற்கு வாய்ப்பே இல்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 9 ஆவது ஐ.பி.எல். போட்டிகளைச் சுமார் 40 கோடி பேர் இப்போட்டிகளை 'டிவி' வழியாகக் கண்டுகளித்தனர். இது 8 ஆவது தொடரை விட கிட்டத்தட்ட இரு மடங்கு அதிகமாகும்.

இதனால், ஐ.பி.எல். தொடருக்குக் கிடைத்த வெற்றியாகும். வெளிநாடுகளில் பார்த்தவர்கள் விவரம் இதில் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, இன்று ஆரம்பமாகும் 10 ஆவது ஐ.பி.எல். தொடர்பான எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்துள்ளது.

# ஐ.பி.எல். திருவிழா இன்று ஆரம்பம்:

## முதல் ஆட்டத்தில் ஐதராபாத் - பெங்களூர் மோதல்!






சென்னை, ஏப். 05

10 ஆவது இந்தியன் பிரிமீயர் 'லீக்' கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாகிறது. முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் சன்ரைசர்ஸ் ஐதராபாத்- ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதுகின்றன.

இந்தியன் பிரிமீயர் 'லீக்' என்று அழைக்கப்படும் ஐ.பி.எல். இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டி 2008 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.

வீரர்கள் ஏலம் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பல நாட்டு வீரர்கள் ஓர் அணியில் இணைந்து ஆடியமை காரணமாக இந்தப் போட்டிக்கு ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பு இருந்தது.

கோடிக்கணக்கில் பணம் புரண்டதால் இந்தப்போட்டி வர்த்தக ரீதியாக நடத்தப்பட்டது. அதே நேரத்தில் ரசிகர்களுக்கு நல்ல பொழுது போக்காகவும் அமைந்தது.

சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ், ரோஜஸ்தான் ரோயல்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப், டெல்லி டேர்டெவில்ஸ், ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ஆகிய 8 அணிகள் இந்தப் போட்டியில் கலந்துகொண்டன. 2008 ஆம் ஆண்டு நடந்த முதல் ஐபிஎல். போட்டியில் ஷேன் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

நாடாளுமன்ற தேர்தல் காரணமாக 2009 ஆம் ஆண்டு போட்டி இந்தியாவில் இருந்து தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டது. இதில் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும், 2010 ஆம் ஆண்டு டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸும் சம்பியன் பட்டம் பெற்றன.

4 ஆவது போட்டியில் கூடுதலாக புனே வாரியர்ஸ், கொச்சி டஸ்கர்ஸ் ஆகிய 2 புதுமுக அணிகள் பங்கேற்றன. 10 அணிகள் பங்கேற்ற இந்தப் போட்டியிலும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியே சம்பியன் பட்டம் பெற்று தொடர்ந்து 2 ஆவது முறையாக ஐ.பி.எல். கோப்பையை வென்றது.

5 ஆவது ஐ.பி.எல். போட்டியில் 9 அணிகள் விளையாடின. விதிமுறை மீறி செயற்பட்டமையால் கொச்சி டஸ்கர்ஸ் அணி நீக்கப்பட்டது. இதில் கம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி கோப்பையை வென்றது.

2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற 6ஆவது போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி நீக்கப்பட்டதால் சன்ரைசர்ஸ் அணி விளையாடியது. இதில் மும்பை இந்தியன்ஸ் கோப்பையை வென்றது. அந்த போட்டியோடு புனே வாரியர்ஸ் அணி கலைக்கப்பட்டது.

7 ஆவது ஐ.பி.எல். ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் இந்தியாவில் போட்டி நடந்தது. 8 அணிகள் பங்கேற்ற இந்தப்போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 2 ஆவது முறையாக கோப்பையை வென்றது.

2015 ஆம் ஆண்டு இடம் பெற்ற ஐ.பி.எல். போட்டியில் மும்பை இந்தியன்ஸ் சம்பியன் பட்டம் பெற்றது. 2 ஆவது முறையாக கோப்பையை வென்றது.

கடந்த ஆண்டு ஸ்பாட் பிக்சிங் சூதாட்டத்தில் ஈடுபட்டதற்காக சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் ஆகிய அணிகளுக்கு 2 ஆண்டு தடை விதிக்கப்பட்டது. அவற்றுக்குப் பதிலாக ரைசிங் புனே சூப்பர் ஜெய்ன்ட்ஸ், குஜராத் லயன்ஸ் ஆகிய 2 அணிகள் 2 ஆண்டுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டன.

கடந்த ஆண்டு இடம் பெற்ற போட்டியில் வோர்னர் தலைமையிலான சன்ரைசர்ஸ் ஐதராபாத் கோப்பையை வென்றது.

10 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா இன்று ஆரம்பமாகிறது. மே மாதம் 21 ஆம் திகதி வரை 41 நாள்கள் இந்தப்போட்டி இடம்பெறவுள்ளது.

8 அணிகள் விளையாடும் இந்தப்போட்டியில் ஒவ்வோர் அணிக்கும் 14 ஆட்டங்கள் இடம் பெறும். 'லீக்' முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் 'பிளேஆப்' சுற்றுக்கு முன்னேறும்.

எந்த ஐ.பி.எல் போட்டியிலும் இல்லாத வகையில் இந்த ஐ.பி.எல். போட்டியில் வீரர்களின் காயம் அதிகரித்து உள்ளது.

# தலைவர் பதவியில் இல்லாமல் விளையாடுகிறார் டோனி!




புனே, ஏப். 05

இதுவரை நடந்த 9 ஐ.பி.எல். போட்டியிலும் டோனி தலைவர் பதவியில் இருந்துள்ளார். ஆனால், இந்த ஐ.பி.எல்லில் முதல் முறையாகத் தலைவராக இல் லாமல் வீரராக விளையாடவுள்ளார்.

முதல் 8 போட்டியிலும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு டோனி தலைவராக இருந்தார். இதில் 2 முறை ஐ.பி.எல். கோப்பையை வென்றார். தடை காரணமாக சென்னை அணி பங்கேற்க முடியாததால் டோனி கடந்த ஆண்டு ரைசிங் புனே அணிக்கு தலைவராகப் பணியாற்றினார்.

இந்தத் தொடரில் புனே அணி நிர்வாகம் அவரை நீக்கிவிட்டு ஸ்டீவன் ஸ்மித்தை தலைவராக நியமித்துள்ளது.

அடுத்த ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல். போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பங்கேற்கும் போது டோனி மீண்டும் தலைவராகக் கடமையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஒலிம்பிக் வெற்றி வீராங்கனை சாக்ஷி மல்யுத்த வீரர் சத்தியவர்த்தை மணந்தார்!



சண்டிகர், ஏப். 05

ரியோ ஒலிம்பிக் போட்டியில் வெண்கலம் வென்ற இந்திய மல்யுத்த வீராங்கனையான சாக்ஷி மாலிக்கும் சக மல்யுத்த வீரர் சத்தியவர்த்துக்கும் அரியானாவில் நேற்றுமுன்தினம் திருமணம் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு ரியோ டி ஜெனீரோவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில், 58 கிலோ பெண்கள் பிரிவில் போட்டியிட்ட மல்யுத்த வீராங்கனை சாக்ஷி மாலிக் முதல் முறையாக இந்தியாவிற்கு வெண்கலத்தை பெற்றுக் கொடுத்தார்.

மல்யுத்த வீரர் சத்தியவர்த் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற இளைஞர் ஒலிம்பிக் போட்டியில் வெண்கலம் மற்றும் கொமன்வெல்த் விளையாட்டு போட்டியில் வெள்ளி பதக்கம் வென்றவர் ஆவார்.

இந்தியாவுக்காக குத்துச் சண்டை களத்தில் பதக்கங்களை குவித்த இவர்கள் இருவருக்கும் கடந்த ஒக்ரோபர் மாதம் நிச்சயார்த்தம் இடம்பெற்றது.

இந்த நிலையில், அவர்களின் திருமணம் நேற்று முன்தினம் சாக்ஷி மாலிக்கின் சொந்த மாநிலமான ஹரியானாவின் ரோத்தக் நகரில் சிறப்பான முறையில் நடைபெற்றுள்ளது.

# இந்திய அணியில் மீண்டும் இடம் பிடிப்பேன்: தவான் நம்பிக்கை

ஐதராபாத், ஏப் 05

ஐ.பி.எல். போட்டிகளில் சிறப்பாக ஆடி இந்திய அணியில் மீண்டும் இடம் பிடிப்பேன் என்று ஷிகர் தவான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தாத காரணமாக கடந்த சில மாதங்களாக இந்திய அணியில் இடம் பிடிக்க முடியாமல் தவித்து வரும் தொடக்க ஆட்டக்காரர் ஷிகர் தவான், ஐ.பி.எல். போட்டிக்காகக் கடுமையாக தயாராகி இருக்கிறார்.

இந்தப் போட்டிக்கான ஐதராபாத் சன் ரைசர்ஸ் அணியில் இடம் பிடித்துள்ள ஷிகர் தவான் இந்த சீசனில் தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்திய அணியில் மீண்டும் இடம் பிடிக்க திட்டமிட்டு இருக்கிறார்.

இந்த நிலையில், ஷிகர் தவான் இது தொடர்பில் தெரிவித்தவை வருமாறு:-



நாங்கள் முதல் ஆட்டத்தை ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கிறோம். விராட் கோஹ்லி இந்த ஆட்டத்தில் காயம் காரணமாக ஆடமாட்டார் என்பது எங்களுக்கு நல்ல விடயமாகும். அந்த அணியின் சிறப்பான வீரர்களில் ஒருவரான அவர் பெங்களூர் அணியைக் கடந்த ஆண்டு அருமையான முறையில் வழிநடத்தினார்.

கோஹ்லி தவிர அந்த அணியில் அதிரடி வீரர்களாக கெய்ல், டிவில்லியர்ஸ், ஷேன் வோட்சன் ஆகியோர் உள்ளனர். இந்த ஆட்டத்துக்காக நாங்கள் நன்றாகத் தயாராகி இருக்கிறோம். வெற்றியுடன் இந்த போட்டியை தொடங்கும் வேகத்தில் உள்ளோம்.

ஐ.பி.எல். போட்டியை இந்திய அணிக்கு மீண்டும் திரும்ப அடித்தளமாக நான் நினைக்கிறேன். இந்த போட்டி தொடர் மற்றும் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக செயற்பட்டு இந்திய அணியில் மீண்டும் இடம் பிடிப்பேன்.- என்றும் தெரிவித்துள்ளார்.

## அரசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது இளைஞர் யுவதிகள் அரச உத்தியோகந்தான் கதி என்று இல்லாமல் எமக்குக் கிடைக்கக் கூடிய வளங்களைக் கொண்டுஉற்பத்திகளைஊக்குவிப்பதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த உற்பத்தியாளர்களாகவும் வருமானத்தை அதிகம் பெறுபவர்களாகவும் மாறலாம்.

அண்மையில் தொழிற்துறைஅமைச்சர்மலிக்சமரவிக்ரம இங்குவந்திருந்தார். இரண்டாயிரம் தொழில் முயற்சியாளர்களை நாடு முழுமையாக உருவாக்கவேண்டும் என்றும் அவர்களுள் இருநூறு பேரை வடமாகாணத்தில் உருவாக்க முயற்சிகள்எடுத்துவருகின்றார்எனவும் கூறினார்.

அன்றைய கூட்டத்தில் பங்கேற்ற ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவி திருமதி. இந்திரா மல்வத்த ஏற்றுமதியாளர்களுக்குத் தம்மால் இயலுமான எல்லா உதவிகளையும் செய்வார்எனஉறுதிமொழிஅளித்தார். நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பாடுபடும்மத்திய அரசாங்க அமைச்சர்களுடனும்அபிவிருத்திச்சபைகளுடனும்கைகோத்து, நன்மைகள் பெற்று, எமது உற்பத்திகளைப் பெருக்கிக் கொள்வதும், ஏற்றுமதிகளை விருத்தியடைய உழைப்பதும் தவறல்ல என்று நான் கருதுகின்றேன்.

எம்முள் பலர் வெறுப்பின் அடிப்படையிலேயே அரசியலிலும் ஈடுபடுகின்றார்கள். மற்றைய துறைகளிலும் செயற்படுகின்றார்கள். சதா குற்றம் கூறிக் கொண்டிருக்கவே விரும்புகின்றார்கள். எந்த முன்னேற்றத்திலும் ஈடுபடாமல் இருப்பதே தோதான அரசியல் என்று நினைக்கின்றார்கள். இதுதவறு. எமக்குஅரசியல் ரீதியாகத்தவறு இழைக்கப்பட்டுள்ளது உண்மையே. ஆனால் அதற்காக நாம்எம்மனதில்வெறுப்பையும் துவேசத்தையும் வளரவிடுவது பிழையென்றே எனக்குப் படுகின்றது. அது வன்முறைக்கே வித்திடும். வன்முறையால் ஏற்பட்டஅவதிகளையும்அனர்த்தங்களையும் அல்லல்களையும் அனுபவித்தவர்கள் எம்மக்கள். மீண்டும் பொறாமை, துவேசம், வெறுப்புணர்ச்சிபோன்றவற்றின் பாதையில் பயணிப்பது எமக்கு அழிவையே ஏற்படுத்தும். எமது சிந்தனைகள் மாற வேண்டும்.

நாம் எடுத்துக்கொண்ட செயலின் தன்மையையும்,எங்கள் வலிமையையும்,மாற்றான்வலிமையையும் எம் இருவருக்கும் துணையாக இருப்பவர்களின் வலிமையையும் சீர்தூக்கிப் பார்த்துசெயற்படவேண்டும் என்றார் வள்ளுவர். அண்மைய ஜெனீவா நாடகத்தில் எம் வலிமையும், மாற்றானின் வலிமையும் எமக்குத் துணையாக இருப்பவர்களின் வலிமையையும் தெரிந்து கொண்டோம்.

காலத்துக்குஏற்றவாறுஎமது சிந்தனைகளில் மாற்றங்கள் ஏற்படுவதுஅவசியம். வெறும் ஆத்திரமும்ஆசுயையும்ஆண்மையென்று எம்முள் பலர் நினைக்கின்றார்கள். அதுதவறு. எமதுதுணைவலிமையைமேம்படுத்தவேண்டும். அதனால் தான் அரசாங்கத்தில் தமிழ் மக்களின் உரிமைகளை மன மூவந்து ஏற்றுக்கொள்வோருடன் கூட்டுச் சேரவேண்டும் என்றுநினைக்கின்றேன். அதன் ஊடாக எங்கள் பொருளாதார வலிமையையும் மேம்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன். இதைச்செய்வதாக இருந்தால் நாங்கள் தனிப்பட்ட விதத்தில் அரசாங்கத்திடம் இருந்து நன்மைகளை எமக்கென்று எதிர்பார்க்கக் கூடாது. அவ்வாறான பொறியில் நாங்கள் அகப்பட்டுக்கொண்டோமானால்எமதுகோரிக்கைகளுக்கு மதிப்பில்லாமல் போய்விடும்.

வட பகுதியை சிறந்த உற்பத்திக்கான ஒரு மையமாக மாற்றுவோம் என்று நாங்கள் யாவரும் உறுதி பூணுவோம். அதற்கான உதவி நல்குவோருடன்கூட்டுச்சேரமுன்வருவோம். எமது பொருளாதார விருத்தி எமது வலிமையை வலுவாக்கும் என்பதை மறவாது இருப்போம். எமது பொருளாதார விருத்திக்கு அனைவரும்ஒன்று சேர்ந்து பாடுபடுவோம்.

வடமாகாணத்தின் தொழிற்துறைத் திணைக்களம் எமது புதிய உற்பத்தியாளர்களுக்கு வேண்டியஅறிவுரைகளையும் தொழில் நுட்பங்களையும் வழங்குவதற்கு எந்நேரமும் தயார் நிலையில் இருக்கும். – என்றார் அவர். (உ)

## சிவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய போதிலும் கலந்து கொள்ளவேண்டியஏனைய அரச அதிகாரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள்எதிர்பார்க்கப்பட்டஅளவில் வருகை தராததால் சில பிரச்சினைக்கான முடிவுகள் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

வடமாகாணசபைஉறுப்பினர்கள், முன்னாள் பிரதேச சபை மற்றும் நகர சபை தவிசாளர்கள் போன்றோருக்கு இக் கலந்துயாடலில் பங்குபற்ற அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் அவர்களும் அங்கு சமுகமளிக்கவில்லை.

வடக்கு மாகாணசபை சார்பில் எதிர்கட்சித் தலைவர் எஸ்.தவராசா மட்டும்கலந்துகொண்டுபல்வேறு பிரச்சினைகள் தொடர்பான கேள்விகளை எழுப்பியிருந்தார்.

தமக்குரிய அதிகாரங்கள் தொடர்பாக கேள்வி எழுப்பும் வடமாகாண சபை உறுப்பினர்கள், கிடைக்கின்ற ஒருசில சந்தர்ப்பங்களைக்கூட சரியாகப்பயன்படுத்தி மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முன்வருவதில்லை என வடமாகாண சபையின்எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா அக் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை,வடக்குஅரசியல் வாதிகள் இக்கூட்டத்தை வேண்டுமென்றே புறக்கணித்தனரா எனவும் அப்படியாயின் காரணத்தை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அங்குகலந்துகொண்டசிலர்தமக்குள் உரையாடியமையைக் கேட்கக்கூடியதாக இருந்தது. (ம)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சித்தலைவரும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

இரு தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை கொழும்பில் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போது இலங்கையில் தற்போது இடம் பெற்றுவரும் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் தெளிவுபடுத்தினார்.

சுமார் ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டிருந்தனர். (உ)

## வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் வேட்பாளர் மேரி 2355 இற்கும் அதிகமாக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

இவரை எதிர்த்துப் போட்டியிட்ட கொன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளர் ராகவன் பரஞ்சோதி இரண்டாமிடத்தைப் பிடித்தார். இறுதிக்கட்ட வாக்குகள் விவரம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், லிபரல் கட்சி வேட்பாளர் 9856 வாக்குகளையும், ராகவன் பரஞ்சோதி 7501 வாக்குகளையும் பெற்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கேப்பாபிலவுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட தாயொருவர் நேற்றுத் தமது அன்றாடக் கடமைகளை மேற்கொள்ளும்போது மயங்கி விழுந்துள்ளார்.

இதன் காரணமாக அவருக்குத் தலையில் காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உயர் இரத்த அழுத்தம் காரணமாகவே இவ்வாறு மயக்க நிலை ஏற்பட்டுள்ளது எனக் குடும்பஉறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தப் பெண்ணிற்கு ஏற்கனவே உயர் இரத்த அழுத்தம் இருப்பது கண்டறியப்பட்டு, வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பெண் இதற்கு முன்னர் பிலக்குடியிருப்புக்காக நடந்த போராட்டத்துடன் சேர்ந்து தொடர்ந்தும் 65 நாட்களாக கேப்பாபிலவில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக்கூட்டத்தில்கலந்துகொண்டவர்கள், "வலி.வடக்கில் பொது மக்களின் சில காணிகள் பொலிஸார் வசம் உள்ளன. குறிப்பாக காங்கேசன்துறையில் உயர் பாதுகாப்பு வலையத்திற்குள் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட பொதுமக்களின் பல வீடுகளை பொலிஸார் இன்னமும் கையகப்படுத்தி வைத்திருக்கின்றனர். யாழ்ப்பாணம் அசோகா கோட்டலும் இதுவரை விடுவிக்கப்படவில்லை. இக் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்"-என்றுபொலிஸாரிடம் கோரியிருந்தனர்.

இதற்குப் பதிலளித்த யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண–

யாழ்ப்பாணம் அசோகா ஹோட்டல் மிக விரைவில் உரிமையாளரிடம் கையளிக்கப்படும். ஆனால், வலி.வடக்கில் பொலிஸ் நிலையக் காணிகள் இராணுவம் மற்றும் கடற்படையினர் வசம் உள்ளன. இக் காணிக்குபதிலாககடற்கரையை அண்மித்ததாகபொலிஸ்விடுதி அமைப்பதற்குக் காணி வழங்க தீர்மானிக்கப்பட்டது.

இருப்பினும் அக் காணியில் பொலிஸார்நிலைகொள்வதற்கு தேவையான 5மாடிக்கட்டடத்தை நிர்மாணிக்கமுடியாது. பொலிஸ் விடுதி அமைக்கப்படக்கூடிய காணி வழங்கப்பட வேண்டும். இல்லையேல் பொலிஸ் நிலையத்திற்குஉரித்தானகாணி விடுவிக்கப்பட்டு அதில் கட்டடம் நிர்மாணிக்க வேண்டும். அதுவரை காங்கேசன்துறையில் உள்ளபொலிஸார் விலகிச் செல்வது என்பது நடைமுறைக்குச் சாத்தியமானது இல்லை – என்றார்.

இதன்போது தெல்லிப்பளை பிரதேச செயலாளர் சிறிமோகன் அங்கு கருத்துக் கூறுகையில்–

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுவித்துச் சென்ற பொது மக்களின் 56 வீடுகளையும் நடேஸ்வரக் கல்லூரிக்குச் சொந்தமான காணியையும் பொலிஸார் தொடர்ந்தும் கையகப்படுத்தி, விடுவிக்காமல் இருப்பது பொருத்தமானது அல்ல. – என்றார்.

அவரைத்தொடர்ந்து கருத்து வெளியிட்ட பருத்தித்துறை பிரதேச செயலாளர், தமது பிரதேசத்திலும்பொலிஸாரினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவித்துத் தரவேண்டும் என அப்பகுதிப்பொதுமக்கள்பிரதேச செயலகத்திடம் கோரிக்கைகளைமுன்வைத்துள்ளனர். –என்றார். (ம)

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் –

இது பற்றிய உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் பெரும்பாலும் இன்று வெளியிடப்படும் எனவும் – தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தற்போதைய துணைவேந்தராகவுள்ளவசந்தி அரசரட்ணம் ஓய்வுபெறவுள்ளார்.

புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்காக யாழ். பல்கலைக்கழக மூதவையில் நடத்தப்பட்ட தேர்தலில் பேராசிரியர் சற்குணராசா முதலாவதாக வந்தார் என்பது தெரிந்ததே.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் ஒன்பதாவது துணைவேந்தராகப் பதவியேற்கும் பேராசிரியர் சிறிசற்குணராசா, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்திலேயே படித்துப் பட்டம் பெற்று அந்தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகும் முதலாவது கல்விமான் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். பல்கலைக்கழகத்தின் புகழ்பூத்த துணைவேந்தர்களுள் ஒருவரான பேராசிரியர் துரைராஜா போலவே பேராசிரியர் சிறிசற்குணராசாவும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மற்றும் ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் என்பதும் ஈண்டு கவனிக்கத் தக்கதாகும்.

பேராசிரியர் சிறிசற்குணராசா விளையாட்டுத்துறை ஆர்வலர் என்பதும், முன்னாள் புகழ்பூத்த விளையாட்டு வீரர் என்பதும் குறிப்பிடத்தக்கவை. (உ)

## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டுள்ளது.

இலங்கையில் காணி உரிமையை வென்றெடுப்பதற்கான மக்கள் இயக்கத்தினால், நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் முன்பாக நேற்று மாலை 3.30 மணிக்கு செய்யப்பட்டுள்ளது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஒழுங்கமைப்பில் காணிஉரிமையைவென்றெடுப்பதற்கான மக்கள் இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இயக்கம் 12 கோரிக்கைகள் அடங்கியதாக தமது நல்லூர்ப் பிரகடனத்தை நேற்று செய்துள்ளது.

மாலை 3.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலயம் முன்பாகக் கூடிய மக்கள் இயக்கத்தினர் சமய வழிபாடுகளை மேற்கொண்டமையுடன், தமது பிரகடனத்தை மேற்கொண்டனர்.

மேற்படி பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 12 கோரிக்கைகளாவன :–

★ எமக்கு அவசியமான அடிப்படை வசதிகள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

★ எமக்குச் சொந்தமான காணிகளை மீள எமக்குக் கொடு.

★ எமக்கு எமது கடல் பிரதேசத்தை விட்டுக் கொடு.

★ எமக்கு எமது விளை நிலங்களைக் மீளக் கொடு.

★ எமது நிலங்களுக்கான உத்தியோகபூர்வ உரிமையை வழங்கு.

★ எமது பூர்வீக வாழ்விடங்களை எமக்கு மீளக் கொடு.

★ எமக்கு சொந்தமான வீடுகள் மற்றும் உடைமைகளை அழித்தது போன்றே மீளவும் அவைகளை கட்டியெழுப்பு.

★ எமது வீடுகளைப் பயன்படுத்திய வருடங்களுக்கான நஷ்டஈட்டை வழங்கு.

★ எமது பூர்வீகத் தொழில்களை மீள ஆரம்பிக்க எமக்கு சந்தர்ப்பம் வழங்கு.

★ எமது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கும், எமது நம்பிக்கையை வெல்வதற்கும், எமக்கு கொடுத்த வாக்குறுதிகளை அரசாங்கம் முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

★ நாம் எமது காணி மற்றும் வாழ்வதற்கான உரிமையை வென்றெடுப்பதற்காக போராட்டங்களை நடத்தும்போது பாதுகாப்புப் படையினர் மற்றும் உளவுத்துறையினரால் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்களை நிறுத்தி நாம் சுதந்திரமாக செயற்பட இடமளிக்கப்படவேண்டும்.

★ மேற் குறிப்பிட்டுள்ள உரிமைகளை வென்றெடுப்பதற்காகச் சகல மக்களையும் அழைக்கிறோம். மேலும் தமது உரிமைகள் வெல்லப்படும் வரையில் தொடர்ந்தும் போராட்டம் நடத்தப்படும். (உ)

## பட்டதாரிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு வேலையற்ற பட்டதாரிகள் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக இரவு பகலாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தமக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்தே இந்த தொடர் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

ஒரு மாதத்தைத் தாண்டிப் போராட்டம் தொடர்கின்ற நிலையில், இதுவரை நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் பட்டதாரிகள் போராட்டத்தின் வடிவங்களை மாற்றி வருகின்றனர்.

இந்த மாற்றத்தின் ஒரு வடிவமாகவே தாங்கள் பட்டம் பெற்ற பல்கலைக்கழகத்தில் இருந்து இன்று பேரணி நடத்தத் தீர்மானித்திருக்கின்றனர். இந்தப் பேரணி யாழ்.பல்கலைக் கழக முன்றிலில் இருந்து இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகிப் பலாலி வீதியூடாக வேம்படிச் சந்தியைச் சென்றடைந்து அங்கிருந்து யாழ். மாவட்டச்செயலகம் வரை இடம் பெறவுள்ளது.

பேரணியாகச் செல்லும் பட்டதாரிகள் தமது நியமனத்தை வலியுறுத்தி யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகனிடம் மகஜர் ஒன்றையும் கையளிக்கவுள்ளனர்.

இதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இன்று வேலையற்ற பட்டதாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவார் எனவும் தெரியவருகின்றது. (ம)

## கேப்பாபிலவுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் கைப்பற்றி வைத்துள்ளனர். இராணுவத் தலைமையகமும் அதில் அமைந்துள்ளது. இந்தக் காணியைவிடுவிக்குமாறுகோரி கேப்பாபிலவு மக்கள் தொடர் போராட்டங்களைமுன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் கடந்த வாரம் இரவு, எதிர்க்கட்சித்தலைவர்இரா. சம்பந்தன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தநிலையில், மூன்று நாட்களின் பின்னர் அதாவது கடந்த வியாழக்கிழமை, இராணுவத்தளபதி கிரிஷாந்த டி சில்வாவுடன் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் பேச்சுநடத்தியுள்ளார். கேப்பாப்புலவுக் காணி விடுவிப்புத் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரால் வினாவப்பட்டது.

அதற்கு, இராணுவத் தளபதி, அந்தக் காணிகளை நிச்சயம் விடுவிப்போம் என்று பதிலளித்துள்ளார். அங்கு அமைந்துள்ள இராணுவ முகாமை இடமாற்றுவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அது முடிவடைந்ததுமே அந்தக்காணிகள் விடுவிக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவரிடம் இராணுவத் தளபதி உறுதியளித்துள்ளார் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் விவரங்களை அரசிடம் கையளிக்க நடவடிக்கை



வவுனியா, ஏப்.05

வவுனியா மாவட்டத்தில் வசிக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவரங்களை உறவினர்கள் உடனடியாக பதிவு செய்யுமாறும், ஒருவார காலத்துக்குள் அவர்களது விவரங்களை அரசிடம் கையளிக்க வுள்ளனர் என்றும் வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்சங்கத்தலைவி கா.ஜெயவனிதா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வவுனியா மாவட்டத்தில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்த மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பதில் அளிக்க அவர்களின் விவரங்களைக் கோரியுள்ளார்.

இந்த நிலையில் ஒரு வார காலத்தில் விவரங்களைக் கையளிப்போம் என்று தெரிவித்திருந்தோம். அதற்காக பதிவு நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

உறவினர்களை உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.-என்றார்.

இதேவேளை, வவுனியாவில் நேற்று 40 ஆவது நாளாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. (ஐ-100)

# செயலிழந்த தபால் நிலையங்களை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை

## தபால்துறை அமைச்சர் ஹலீம் தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு பகுதியில் யுத்த காலத்தின் போது இயங்காமல் செயலிழந்துபோன தபால் நிலையங்கள், உப தபால் நிலையங்களை மீளவும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அதிகாரிகள் தகவல்கள் திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று முஸ்லிம் சமயம் கலாசாரம் மற்றும் தபால்துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

யுத்த காலத்தில் செயலிழந்து போன தபால் நிலையங்கள் மட்டுமல்ல மீள் குடியேற்றப் பகுதியில் தேவையை கருத்தில் கொண்டு புதிய தபால் நிலையங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த முறை இரு நகரங்களில் சகல நவீன வசதிகளையும் கொண்ட பிரதான தபால் நிலையக் கட்டடத் தொகுதி நிர்மாணிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தப் பிரதான தபால் நிலையக் கட்டடத் தொகுதி ஒன்று பொலன்னறுவை மாவட்டத்திலும் மற்றையது மட்டக்களப்பு மாவட்டத்திலும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

உலக தபால் தின நிகழ்வுகள் வட மத்திய மாகாணத்திலேயே இந்த முறை இடம் பெறவுள்ளன. அதனை முன்னிட்டு இவற்றுக்கு அடிக்கல் நடப்படும்.

பொலன்னறுவை மாட்டத்தில் ஜனாதிபதியாலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள பிரதான தபால் நிலையக் கட்டடத் தொகுதிக்குப் பிரதமராலும் அடிக்கல் நடப்படும்.-என்றார். (ஐ)

# சிவபூமி முதியோர் இல்ல 10 ஆவது ஆண்டு பூர்த்தி விழா

## சனியன்று சிறப்பு நிகழ்வுகள்

சுழிபுரம்,ஏப்.05

தொல்புரத்தில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்லத்தின் பத்தாவது ஆண்டு பூர்த்தி விழா எதிர்வரும் 08 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல்லத்தின் பாலச்சந்திரன் மண்டபத்தில் இடம்பெறும்.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தம்பதியர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தம்பதியரும் இளைப்பாறிய கணக்காளர் வை. ஈழலிங்கம் தம்பதியரும் கலந்து கொள்வர்.

ஆசியுரைகளை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள், வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ சுந்தர ஸ்ரீரங்கநாதக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபானந்த மகராஜ் ஆகியோர் வழங்குவர்.

வாழ்த்துரைகளை சங்கானை பிரதேச செயலர் அ.சோதிநாதனும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் வைத்தியர் செ. கண்ணதாசனும், யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் ரி.சத்தியமூர்த்தியும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து 'தரிசனம்' ஆவண ஒளிநாடா வெளியீடும் 'சிவபூமிநிழல்' சிறப்பு மலர்வெளியீடும், காவடி ஆட்டம், நாடகம், வில்லிசை, நடனம் போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

ஆவண நாடா வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கு.பாலசண்முகனும் சிறப்பு மலர் வெளியீட்டுரையை 'வலம்புரி' ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் நிகழ்த்துவர். (இ)



# தவக்கால சிந்தனை

## உடைந்த உள்ளத்தாருடன் ஆண்டவர் இருக்கின்றார்

உடைந்த நொருங்கிய,நைந்த உள்ளம் உடையோர் நீதிமான்களே. நீதிமான்கள் எனப்படுபவர்கள் இறைவிருப்பதை, திட்டத்தை நிறைவேற்றுபவர்கள், அவர்கள் தம் பாவ வழிகளை விட்டு விட்டு இறை வழியில் பயணிக்க தாழ்ச்சி உள்ளம் கொண்டு முயற்சிப்பவர்கள். அவர்கள் குரலுக்கு இறைவன் செவிமடுக்கின்றார். நீதிமான்களை அழித்தொழிக்க மனிதர் முயற்சித்தாலும் இறைவன் அவர்களை காக்கின்றார். இறை பற்றில்லாதவர்கள் நீதிமான்களை அழிக்க முயற்சிக்கின்றார்கள். நீதிமானாகிய இயேசுவையும் அவ்வாறே கொல்ல முயற்சிப்பதை இன்றைய நற்செய்தி எடுத்துரைக்கின்றது.

இயேசு யார் என்றும் எங்கிருந்து வருகிறார் என்றும் தெரிந்தவர்கள் நாங்கள். எனவே அவரை மெசியா என நம்பத் தேவையில்லை என துச்சமாக எண்ணினர் யூதர்கள். ஆகவே தான் " நான் யாரென்று அறிவீர்கள் எங்கிருந்து வருகிறேன் என அறிவீர்கள். ஆயினும் நானாக வரவில்லை" என அறிவுறுத்துகின்றார். இயேசு மெசியா என்றால் அவர் எங்கிருந்து வருகிறார் என எவருக்கும் தெரிந்திருக்கக் கூடாது. அப்படி எனில் மட்டுமே அவர் மெசியா என யூதர்கள் வாதிட்டனர்.

ஒருவரின் மொழி, பிறப்பிடம், குலம் வைத்து அவரை தவறாக எண்ணுவதும், நடத்துவதும் மிக மோசமான இழப்புக்களை நமக்கு ஏற்படுத்தும். அது நற்பண்பல்ல என நற்செய்தி கூறுகின்றது.

ஆகவே தாழ்ச்சி உள்ளம் கொண்டு மனம் மாறி இறை வழியில் பயணிப்போம். இறை திருவுள்ளத்தை நிறைவேற்ற எமது வாழ்விலே தடையாக இருக்கும் எமது இறுமாப்பு செயல்களானபாவங்களில் இருந்து ஒதுங்கி நிற்க இன்றைய நாளிலே முயற்சிப்போம். உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கின்றார் என்ற வசனத்தைத் திரும்பத் திரும்ப எமது உள்ளத்திலே உணர்ந்து செல்வோம்.

செல்வி. யூட்குமார் தனுஜா

## சின்மயா மிஷனில் ஸ்ரீஇராம நவமி

யாழ்ப்பாணம் ஏப்.05

ஸ்ரீஇராமபிரான்அவதரித்த தினத்தை முன்னிட்டு ஸ்ரீ இராம நவமி யாழ்.சின்மயா மிஷன் ஞானவேல் ஆச்சிரமத்தில் இன்று புதன் கிழமை மாலை 5 மணிக்கு கொண்டாடப்படும்.

## லயன்ஸ் ஏற்பாட்டில் மாணவர் கௌரவிப்பு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த வருடம் 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி கலசார மண்டபத்தில் இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கழகத் தலைவர் லயன் இ.சிறேஷ் தலைமையில் நடைபெறும்.

இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306பி1 மாவட்ட ஆளுநர் மருத்துவர் லயன் வை. தியாகராஜா கலந்து கொள்வார்.

நிகழ்வில் 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்ற 91 மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (இ,ச)

## மன்னார் துயர்துடைப்பு சங்கத்தினர்

# ஆதரவற்ற மாணவர்களது கல்வி நடவடிக்கைக்கு உதவி



மன்னார்,ஏப்.05

பெற்றோர்களை இழந்து கல்வியில் ஆதரவற்ற நிலையில் இருக்கும் மாணவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி வரும் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வு சங்கம் நடப்பு வருடத்துக்கான முதலாம் தவணைக்கான உதவிப் பணத்தை 64 மாணவர்களுக்கு வழங்கியுள்ளது.

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கம் கடந்த 16 வருடங்களாக மன்னார் மாவட்டத்திலுள்ள பெற்றோரை இழந்த மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான உதவிகளை மேற்கொண்டு வருகின்றது

இந்த நிகழ்வு மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்க மண்டபத்தில் இதன் தலைவர் அருட்பணி ஏ.சேவியர் குரூஸ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் லண்டன் தமிழ் கத்தோலிக்க ஒன்றியத்தின் முன்னாள் தலைவரும் தற்போது இதன் சிறப்பு அங்கத்தவராகவும் செயற்பட்டுவரும் சசிகரன் டயஸ்பிலிப்புப்பிள்ளை லண்டனிலிருந்து வருகை தந்து கலந்து கொண்டார்.

இவர்களுக்கான இந்த உதவி லண்டன் தமிழ் கத்தோலிக்க ஒன்றியத்தால் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-112)

# இலங்கைக்கு வருகை

## இந்தியக் கரையோரப் பாதுகாப்புக்கான 'சூர்' கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு



கொழும்பு. ஏப்.05

இந்தியக் கரையோரப் பாதுகாப்புக் கப்பலான 'சூர்' பயிற்சி மற்றும் நல்லெண்ண அடிப்படையில் பயணத்தை மேற்கொண்டு கொழும்பு வந்துள்ளது. இந்தக் கப்பலை இலங்கைக் கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்றனர்.


இதன் பின்னர் அதன் கட் டளைத் தளபதி கப்டன் எஸ். எஸ். டசீலா இலங்கைக் கிழக்குக் கடற்படை தலைமையகத்தில் நிறைவேற்றுக் கட்டளைத்தளபதி றியல் அட்மிரல் நிரான்ஜா ஆட்டிகலவைச் சந்தித்தார். இருவரும் நட்புறவுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிகழ்வை குறிக்கும் வகையில்நினைவுச் சின்னங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

'சூர்' கப்பல் இலங்கையில் தங்கியிருக்கும்போது இரு நாட்டுக் கடற்படையினரும் பயிற்சியில் ஈடுபடவுள்ளனர்.

கடற்படை விளையாட்டுக் குழுவுடன் நட்புறவுப்போட்டியிலும் ஈடுபடவுள்ளனர். இந்தக் கப்பல் 8 ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்படவுள்ளது. (உ)

## உலகின் பெரிய வாகனங்கள் காவியான நோர்வேக் கப்பல் அம்பாந்தோட்டைக்கு!




கொழும்பு, ஏப். 05

உலகின் மிகப்பெரிய மோட்டார் வாகனப் போக்குவரத்துக் கப்பலான Hoegh Trigger அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை வந் தடைந்துள்ளது.

நோர்வே, ஒஸ்லோவை சேர்ந்த Hoegh Autoliners என்ற நிறுவனத்திற்குச் சொந்தமான இந்தக் கப்பல் கடந்த 31ஆம் திகதி அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை வந்தடைந்தது.

14 தட்டுக்களைக் கொண்ட இந்தக் கப்பல் ஒரு தடவையில் 8500 மோட்டார் வாகனங்களைக் காவிச்செல்லும் திறனைக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ)




## 38 தமிழக மீனவர்களும் தாயகம் திரும்பினர்





கொழும்பு, ஏப். 05

இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, இலங்கைச் சிறையில் வைக்கப்பட்டிருந்த பின்னர் விடுவிக்கபட்ட 38 தமிழக மீனவர்களும் இந்திய - இலங்கைக் கடல் எல்லைப் பகுதியில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் இந்தியக் கடற்படையினரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டனர். (உ)

## ஸ்ரீ வராகி அம்பாளுக்கு இன்று கொடியேற்றம்

கொக்குவில் மேற்கு, ஸ்ரீ வராகி அம்பாள் தேவஸ்தான உற்சவம் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை பெரிய சப்பறமும், 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்குத் தேர் உற்சவமும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த் தோற்சவமும், கொடியிறக்கமும் இடம்பெறும். (இ)

### வேலையற்ற பட்டதாரிகள்

## கறுப்புக் கொடியுடன் மட்டு நகரில் மோட்டார் சைக்கிளில் பவனி!




தமக்கு அரசாங்க உத்தியோகம் வழங்கப்பட வேண்டும் என்று கோரி மட்டக்களப்பு காந்தி சிலை மைதானத்தில் போராட்டத்தை நடத்தி வரும் வேலையற்ற பட்டதாரிகள் நேற்றுக் கறுப்புக் கொடி ஏந்தி மோட்டார் சைக்கிள் பவனி ஒன்றை நடத்தினர்.

இதில் ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு நகரிலிருந்து ஆரம்பமான இந்த பவனி வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழகம் வரையில் சென்று மீண்டும் கல்லடி பாலம் ஊடாக கல்லடி, நாவற்குடா விபுலானந்தா இசைநடனக் கல்லூரி வரையில் சென்று மீண்டும் சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெறும் காந்தி சிலை மைதானத்தைச் சென்றடைந்தனர். (உ)

## தமிழரின் சுயநிர்ணய உரிமைக்காக குரல் கொடுத்த அஜித் ரூபசிங்க

### சனிக்கிழமை அவரின் இறுதிக்கிரியைகள்



இலங்கையின் புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவரான அஜித் சுரேந்திர ரூபசிங்க (வயது -72) சிறிது கால சுகவீனத்தின் பின்னர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலமானார்.

சண்முகதாசன் தலைமையிலான மாவோவாத கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாடுகளில் தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக்கொண்ட அஜித் ரூபசிங்க அவரின் மறைவிற்கு பின்னர் கடந்த 20 வருடங்களுக்கும் அதிகமான காலம் அக்கட்சியின் பொதுச்செயலாளராக செயலாற்றி வந்தார்.

கட்சியின் செயற்பாடுகளுக்கு அப்பால் இனங்கள், மதங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை வளர்க்கும் பணிகளுக்காக பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களுடனும் இணைந்து அண்மைக்காலமாக இவர் பாடுபட்டார்.

தேசிய இனப்பிரச்சினையை பொறுத்தவரை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதிலும் உள்நாட்டு போரில் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் கொடுமைகளுக்கு பொறுப்பானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதிலும் உறுதியான நிலைப்பாட்டை கொண்டவராக விளங்கியவர் ரூபசிங்க. இவர் இலங்கையின் பிரபல சிவில் சமூக தலைவர்களில் ஒருவரான கலாநிதி குமார் ரூபசிங்கவின் சகோதரராவார்.

அவரின் பூதவுடல் பாதுக்கையில் உள்ள பாதுக்கை மலர்சாலையில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு எதிர்வரும் சனிக்கிழமை இறுதி கிரியைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### கண்ணீர்ப் புகைக் குண்டு வீசி, நீரைப் பீய்ச்சி அடித்து

## பிக்கு மாணவர் பேரணி முயற்சி முறியடிப்பு

அனைத்துப் பல்கலைகழக பிக்குகள் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணி மீது பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த் தாரையைப் பீய்ச்சி அடித்தும் அவர்களைக் கலைத்தனர்.

காலி முகத்திடலுக்கு அருகிலுள்ள லோட்டஸ் சுற்றுவட்டத்தில் வைத்து கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை மூடுமாறு வலியுறுத்தி அனைத்துப் பல்கலைகழக பிக்குகள் கூட்டமைப்பினால் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பல்கலைகழக ஆர்ப்பாட்டப் பேரணிக்குச் சற்றுமுன்னதாக காலிமுகத்திடலின் லோட்டஸ் சுற்றுவட்டத்தைப் பொலிஸார் தடைசெய்திருந்தனர்.

போக்குவரத்தை தடைசெய்து பேரணியாக அலரி மாளிகை நோக்கி செல்வதற்கு பிக்கு மாணவர்கள் முற்பட்ட போதே பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பீரங்கித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.04.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.